அறவழி செயலகம்
கற்றல் வளப் பயன்பாட்டு மையக்
கட்டடத் திறப்பு விழா


# நினைவு மஞ்சரி




06 - 09 - 2008

**SOUVENIR OF OPENING CEREMONY OF NVDAG SECRETARIAT AND LRUG**

060
அறவ
SLIPR



மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
எல்லா காலத்திற்கும், எல்லா வயதினர்க்கும்
பொருத்தமான சேமிப்புக் கணக்குகள் எம்மிடம் உள்ளன.
5 வயதான பிள்ளைகளுக்கு
இசுறு உதான சேமிப்புக் கணக்கு
5 வயது முதல் 18 வயது வரையான பிள்ளைகளுக்கு
சிசு உதான சேமிப்பு கணக்கு
18 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு
YES சேமிப்பு கணக்கு
உழைக்கும் பெண்களுக்கான கணக்கு
வனிதா வாசனா கணக்கு
வேளர்மய தரத்திலுள்ளவர்களுக்கு பொருத்தமான கணக்கு
எத் தெர இசுர
மக்கள் வங்கி
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
உங்கள் வயதிற்கும் தேவைக்கும் பொருத்தமான விதத்தில்
மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றை
ஆரம்பித்து வாழ்க்கையில் வெற்றிப்பாதைக்கு பிரவேசியுங்கள்.
மக்கள் வங்கி
www.peoplesbank.lk

Chavakachchari
North
chavakachchari

060
[illegible] 32/PR


S. senthilkumaran
07.10.2008


MOVMENT FOR A NEW SOCIETY

அன்பு அகிம்சை எளிமை


கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

NO: A.C


MOVMENT FOR A NEW SOCIETY

அன்பு அகிம்சை எளிமை

# WE CHANGE OUR LIVES

WUSC SRI LANKA

# EDUCATION CHANGES THE WORLD



# அறவழிப்போராட்டக்குழுவின்
# புதிய செயலகம்
# கற்றல் வளப்
# பயன்பாட்டு
# மையக்
# கட்டடத் (LRUC)
# திறப்பு விழா
# நினைவு மஞ்சரி

**06**

**09**

**08**

NVDAG



# திறப்பு விழா நினைவு மஞ்சரி

**உருவாக்கம்**
எம்.கே.ஜீவகதாஸ்,
செயலாளர்.


**கணணிப் பணி**
செல்வி. சி. சாந்தினி

**விளம்பரம்**
கே. நதிராஜ்

**அச்சுப்பதிவு**
ரம்யன் அச்சகம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

**வெளியீடு**
06 செப்தம்பர் 2008

**மலர் வெளியீட்டுக்குழு**
வி.தயாகரன்
ஏ.மாணிக்கவாசகம்
கே.நதிராஜ்



# மஞ்சரி உட்பொதிவு

01. PROFILE OF NVDAG
02. DETAILS OF BUILDING PROJECT
03. முன்னோட்டம் – செயலாளர்

**வாழ்த்தியல்**

04. அறவழி தலைவரின் வாழ்த்துரை

05. யாழ். அரசாங்க அதிபரின் வாழ்த்து

06. WUSC பிரதி வெளிக்களப் பணிப்பாளரின் ஆசி

07. Message from SARVODAYA Leader

08. தென்மராட்சி பிரதேச செயலர்

09. யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர்

10. SCiSL பிரதி முகாமையாளர் – யாழ்ப்பாணம்

11. IOM தலைமை அதிகாரி – யாழ்ப்பாணம்

12. கரித்தாஸ் கியூடெக் இயக்குனர் – யாழ்ப்பாணம்

13. நல்லை ஆதீன சிவாச்சாரியார் – துணாவில்

14. அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபை – துணாவில்

15. கரவெட்டி பிரதேச செயலர்

16. Programme officer CHA - Colombo

17. உதவித்திட்டமிடல் பணிப்பாளர் – தென்மராட்சி

18. முகாமையாளர் மக்கள் வங்கி – சாவகச்சேரி

19. தலைவர் வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்



20. தலைவர் சாவகச்சேரி லயன்ஸ் கழகம்

21. மாவட்ட இணைப்பாளர் சர்வோதயம் – யாழ்ப்பாணம்

22. அதிபர் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

23. செயலாளர் சாவகச்சேரி பிரதேச சபை

24. செயலாளர் சிறுவருக்கான அபிவிருத்தி நிலையம்

25. கல்விப்பணிப்பாளர் – யாழ்ப்பாணம்

26. அதிபர் ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்

27. தலைவர் – கைத்தொழில் வணிகர் மன்றம்

28. பணிப்பாளர் – தியாகி அறக்கொடை நிறுவனம்

29. தொழில் பயிற்சி அதிகார சபை

**பொதுவியல்**

01. WUSC ன் மதிப்பீடு

02. TVEC – பதிவுச்சான்றிதழ்

03. WUSC – நிதி ஒதுக்கீடு

**ஆக்கவியல்**

01. IMPORTANCE OF TEAM BUILDING...

02. எண்ணம் போல் இருப்பாய்

03. வாழ்க்கைப் புத்தகம்

04. சுய அறிவு


05. ஒப்பிட்டுப்பார்ப்பது

06. வளமான வாழ்விற்கு......

07. சமூகப்பணியில் தனிவரலாறு

**விளம்பரம்**

நன்றி பகிர்வு




# PROFILE OF NONVIOLENT DIRECT ACTION GROUP

# PROFILE OF NONVIOLENT DIRECT ACTION GROUP

| | |
|---|---|
| **a. Name of organization:** | **Nonviolent Direct Action Group (NVDAG)** |
| **b. Inaugurated by:** | **Mr.K.Sachithananthan<br>Secretary<br>Thanthai Chelva<br>Memorial -Trust<br>Somasundaram Lane,<br>Chundukkuly,<br>Jaffna.** |
| **c. Date of inauguration:** | **25.February 1979** |
| **d. Registered No:** | **JA/GA/P/CA/20** |
| **e. Address:** | **Secretariat<br>No;29 Kaithady Nunavil<br>Chavakachcheri<br><br>Postal<br>Post Box No 2<br>Chavakachcheri** |
| **f. Telephone:** | **Mobile; 077 3144730<br>CDMA; 060 221 6911** |
| **g. E mail:** | **nvdag@yahoo.com** |
| **h. Mission:** | **Working towards the formation of a new society based on nonviolence and peace respecting human values and rights.** |

1



**h. Vision:**

Endeavour to enhance the quality of lives of affected children, youth and women, empowering them through participation in the programmes for social change, community development, peace and rehabilitation.


**i. Area of operation:** Jaffna District

**j. Status of organization:**

1. Registration with the Jaffna District Secretariat
2. Registration with the Ministry of Hindu Culture
3. Sri Lanka Section of War Resistors International
4. Affiliation with the International Fellowship of Reconciliation
5. Affiliation with the International Organisation of Good Templars.
6. Affiliation with the International Peace Bureau.
7. Membership with the Jaffna District Council Of Non-Governmental Oragnisations.

**j. Bankers:** Peoples Bank
Chavakachcheri.

**k. Auditor:** S.Vettivelautham & Co
Accounting & Tax Consultants,
359/30 Temple Road,
Nallur,
Jaffna.




சேதமடைந்த அறவழி செயலகம்
DAMAGED SECRETARIAT OF NVDAG






அறவழி செயலகம்

NVDAG SECRETARIAT



கற்றல் வளப் பயன்பாட்டு மையம்

LEARNING RESOURCES UTILIZATION CENTER (LRUC)



NVDAG

WUSC - SL

# PROJECT INFORMATION

| | |
|---|---|
| ★ Title of Project | **"Construction of Two Storey Building for Secretariat of NVDAG and LRUC Project"** |
| ★ Supported by | **World University Service of Canada (WUSC)** |
| ★ Implementing Partner: | **Nonviolent Direct Action Group (NVDAG)** |
| ★ Contact Person of WUSC | **Mr.V.Jeyarajasingam**<br>**Deputy Field Director - North** |
| ★ Contact Persons of NVDAG | **Mr.V.Srisakthivel — President**<br>**Mr.M.K.Jeevagathas — Secretary** |
| ★ Name of Building Contractor | **Royal Constructors**<br>**Thirunelvely**<br>**Jaffna.** |
| ★ Amount tendered | **Rs 9,117,800.00** |
| ★ Date of Commencement | **January 10th 2008** |
| ★ Date of Finishing | **August 20th 2008** |
| ★ Project District | **Jaffna District** |
| ★ Project Division | **Thenmaradchchy** |
| ★ Name of Local Authority | **Pradesha Saba**<br>**Chavakachcheri.** |
| ★ Name of Technical Consultant | **Mr.V.Nithiyananthan**<br>**Jaffna.** |



# முன்னோட்டம்

2000 ஆம் ஆண்டு மே 20ஆம்
நாள்!

அறவழிப்போராட்டக்குழுவின்
வரலாற்றில் கறைபடிந்த
நாள்!!

தென்மராட்சிப் பிரதேசத்தில்
இராணுவ நடவடிக்கைகள்
உச்சம் பெற்றிருந்த
நாள்!!!

அறவழிப் போராட்டக் குழுவின்
தலைமையகமும், அங்கு களஞ்சியப்படுத்தியிருந்த
விலை மதிப்பற்ற
வரலாற்று ஆவணங்களும்,
தளபாடங்களும்
அழிக்கப்பட்ட
துன்பியல் நாள்!

செயலகத்தினைப்
புனரமைப்புச் செய்ய
எத்தனையோ முயற்சிகள்
செய்யப்பட்டன
ஆயினும்
முயற்சிகள் பயனளிக்க
வாய்ப்புக்கள் தூர விலகிப்
போயின.
இருப்பினும்
முயற்சிகள் கைவிடப்படாமல்
தொடரப்பட்டன.

அவ்வேளையில் தான்
கனேடிய உலகப் பல்கலைக்கழக
சேவை நிறுவனம்
(WUSC)

அறவழிப்போராட்டக்குழுவினை
2006ல்
அதன் பயிற்சித்திட்டப்
பங்காளித்துவ நிறுவனமாக
அங்கீகரித்து ஏற்றுக்
கொண்டது.
அதன் காரணமாக
இரு நிறுவனங்களுக்குமிடையில்
தொடர்புகள், உறவுகள், ஈடுபாடுகள்
ஆழமாகின.
பங்காளித்துவம் பலம்
பெற்றிருந்தது.

கனேடிய உலகப் பல்கலைக்கழக
சேவை நிறுவனத்தின்
வடபகுதிக்கான
பிரதி வெளிக்களப் பணிப்பாளர்
திரு.வே.ஜெயராஜசிங்கம் அவர்கள்
அறவழியின் நிலையையும், தேவையையும்
உணர்ந்து கொண்ட வகையில்
செயலகத்திற்கும்,கற்றல்வளப் பயன்பாட்டு மையம்
(LRUC) திட்டத்துக்குமான
ஒரு இருமாடிக் கட்டிடத்தை
அமைத்துத்தர ஒப்புக்கொண்டார்.

அதன் பலனாக
தோற்றம் பெற்றமை தான்
ரூபா 9,117,800/- பெறுமதியான
இருமாடிக் கட்டிடம்.

இக்கட்டிடம் தென்மராட்சி
பிரதேசத்திற்கு கிடைத்த
மாபெரும் பொக்கிசம், என்பது
நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

இத்திட்ட
வளர்ச்சியின் பின்னணியில் –
தொழில்நுட்ப ஆலோசகர்
திருமிகு.வி.நித்தியானந்தன் அவர்கள் –
கட்டிட ஒப்பந்தக்காரரான –



றோயல் கன்ஸ்ரக்சன்
நிறுவனத் தலைவர்
திருமிகு.வி.ஸ்ரீசக்திவேல் அவர்கள்
மற்றும்
கட்டிட நிர்மாணப் பணியில்
ஈடுபட்டிருந்த அனைத்துத்
தொழிலாளர்களுக்கும், மற்றும்
திட்ட வளர்ச்சியில்
அவ்வப்போது
ஆர்வமேலீட்டில் ஈடுபட்டுழைத்த
அனைத்து நல் உள்ளங்களுக்கும் –

எல்லாவற்றுக்கும் மேலாக
கனேடிய உலகப் பல்கலைக்கழக
சேவை நிறுவனத்தின்
வெளிக்களப்பணிப்பாளர்
ஜெயா என அன்போடு அழைக்கப்படும்
திரு.வே.ஜெயராஜசிங்கம் அவர்களுக்கும்
யாழ்ப்பாணம் வூஸ்க் செயலகப் பணியாளர்களுக்கும்
எம் நெஞ்சார்ந்த
அன்பையும்,
நன்றியையும்
தெரிவித்துக் கொள்வதில்
மட்டற்ற மகிழ்ச்சியும்
திருப்தியும்
அடைகின்றோம்.

**எம்.கே.ஜீவகதாஸ்,**
செயலாளர்.



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# வாழ்த்தியல்

MOVMENT FOR A NEW SOCIETY
அன்பு அகிம்சை எளிமை



# அறவழி தலைவரின் வாழ்த்துரை

1979ம் ஆண்டு சமுதாய மறுமலர்ச்சி ஏற்படுத்தும் நன்நோக்கில் காந்திய கோட்பாடுகளுக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்டது அறவழிப் போராட்டக்குழு என்ற எமது நிறுவனம். இன்று தனது முப்பதாவது ஆண்டு மக்கள் சேவையினை நோக்கி வெற்றி நடை போடுகின்ற ஓர் உள்ளூர் தொண்டு நிறுவனமாகப் பரிணமிக்கின்றது மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

இக்காலப்பகுதியில் நிறுவனம் சந்தித்த சோதனைகளும் வேதனைகளும் பல. இவற்றையெல்லாம் வெற்றிகரமாக எதிர்கொண்டு இன்று தலைநிமிர்ந்து மக்கள் நன்மதிப்புப் பெற்ற நிறுவனமாகத் திகழ உறுதுணையாக அமைந்த சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பு மகத்தானது.

இந்த வகையில் இன்று கோலாகலமாகத் திறந்து வைக்கப்படவுள்ள இரண்டடுக்கு மாடிக்கட்டடம் அமைவதற்கு வழிசமைத்து போதிய நிதிவளம் வழங்கிய கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவன வெளிக்களப் பணிப்பாளர் திரு. வே. ஜெயராஜசிங்கம் அவர்களுக்கும் அவரது நிறுவனத்திற்கும் எமது நிறுவனத்தின் சார்பில் நன்றிகள்.



யாழ்மாவட்டத்தில் இன்று சகல வசதிகளும் அமைந்த பயிலகமாகவும், நன்மதிப்புப்பெற்ற தொண்டு நிறுவனமாக அறவழி திகழவும், தனது சொந்தக் கட்டிடத்தில் இயங்கும் வண்ணம் உதவிய கனேடிய உலகப்பல்கலைக்கழக சேவை நிறுவனம் அறவழியின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

மேலும் இக்கட்டடம் அழகுற அமைவதற்கு, ஆலோசனைகள் வழங்கிய தொழில்நுட்பவியலாளர் திரு.வி. நித்தியானந்தன் அவர்கட்கும் குறித்த நேரத்திற்குள் அமைத்துதவிய றோயல் கட்டிட ஒப்பந்தகாரர் நிறுவனத்திற்கும் இவை யாவற்றையும் செவ்வனே கண்காணித்துச் சிறப்புடன் செயலாற்றிய செயலாளர் ஜீவா அவர்களுக்கும் நிறுவனத்தின் தலைவர் என்ற முறையில் எனது உளங்கனிந்த பாராட்டுகளையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வி.ஸ்ரீசக்திவேல் ஜே.பி
**45,அம்பலவாணர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**



"சிலருக்கு வெற்றியென்றால்
செல்வமாகும்.
பிறருக்கு அங்கீகரிப்பும் ஆகும்..
நல்ல உடல் நலனும் ...
நல்ல குடும்பமும் ...
சந்தோசமும் ...
திருப்தியும் ...
மனநிம்மதியுமே வெற்றியாகும்.
இது உண்மையிலேயே என்ன சொல்கிறது என்றால்
வெற்றி என்பது உள்ளார்ந்தது.
வெற்றி என்பதை இரத்தினச் சுருக்கமாகத்
தருகின்ற ஒரு விளக்கம்.
ஒரு மதிப்பு வாய்ந்த இலக்கை
படிப்படியாக அடைதலே
வெற்றியாகும்."







# மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பங்காற்றும் நிறுவனம்

1979ஆம் ஆண்டு முதல் இற்றைவரை யாழ். மாவட்டத்தில் கால, தேச, வர்த்தமானநிலைமைகளுக்கேற்ப அறவழிப் போராட்டக்குழு மக்களோடு மக்களாக வாழ்ந்து வளர்ந்து பொதுச்சேவைக்கு வலுவூட்டும் அரச சார்பற்ற நிறுவனமாகச் செயற்பட்டு வருவது பாராட்டிற்குரியதொரு விடயமாகும்.

"Non Governmental Organization" என்பது அரசாங்கம் அல்லாத நிறுவனம். அதாவது அரசாங்கத்தின் நிதியிலோ அல்லது முகாமையின் கீழோ அன்றி சுயமாகத் தாமாக முன்வந்து வலிந்துதவும் சமூகவேவை அமைப்புக்களே இவை எனலாம். இவ்வகையில் அறவழிப் போராட்டக்குழு விவசாய நிகழ்ச்சித் திட்டத்தினை முன்னெடுப்பதனூடாக விவசாயிகளின் வாழ்க்கைப் போராட்டத்தில் தோள் கொடுத்துதவும் தோழனாக செயற்படுகிறது எனலாம்.

சேதனப்பசளை, உரம், மண்ணெண்ணெய், நீர் இறைக்கும் இயந்திரம் என எவரெவருக்கு என்னென்ன எப்பொழுது தேவையோ அதனை அந்த நேரத்தில் வழங்கி விவசாய விளைவுப் பெருக்கத்திற்கு வழிசமைத்தமைக்காக மாவட்டச் செயலர் என்ற வகையில் நன்றிக்கடன்பட்டுள்ளேன்.



இவ்வாறே இடம்பெயர்வு, சுனாமி போன்ற காலகட்டங்களிலும் அறவழிப் போராட்டக்குழு ஆற்றிய பணி சொல்லில் அடங்காதது. பெற்றோரின் அரவணைப்பு இன்றி அல்லலுறும் இளஞ்சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காக மாதாந்த உதவுதொகையை வழங்கி வருவது போற்றுதற்குரியது.

இளைய தலைமுறையின் எதிர்கால வாழ்வை ஒளிமயமாக்குவதொன்றையே குறிக்கோளாகக் கொண்டு காலத்தின் தேவைக்கும் இளைஞர்களின் விருப்பத் தெரிவுக்குமேற்ப பல்வேறுபட்ட தொழில் கல்விகளையும் புகட்டிவரும் செயற்திட்டமானது யாழ். மாவட்டமெங்கும் விரிவுபடுத்தப்பட வேண்டியதொன்றாகும்.

*"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"* என்பதைப் புரிந்துகொண்டு உலக கனேடிய பல்கலைக்கழகம் (WUSC), கெயார் (CARE) ஆகிய பங்காளிகளுடன் இணைந்து பணியாற்றுவது பாராட்டிற்குரியது.

அறவழிப் போராட்டக் குழுவின் செயற்பாடுகள் யாழ். மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்த பங்காற்றும் என்ற நம்பிக்கையுடன் இறையருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து என் உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகிறேன்.

"வாழ்க வளர்க நும் பணி"

**க. கணேஷ்**


*அரசாங்க அதிபர்/மாவட்ட செயலர்,*
*யாழ் மாவட்டம்.*



" வெற்றி என்பது அதிர்ஸ்டம்
அல்ல
வாய்ப்பு
அதிர்ஸ்டம் ஒரு சிலருக்கு மட்டுமே
கிடைப்பது.
வாய்ப்பு, முயன்றால் எல்லோருக்கும்
கிடைப்பது.
அதற்குப் பூர்வாங்க கல்வியறிவு
அவசியமில்லை.
விசேடத் திறமை வேண்டும்
என்பதில்லை.
உழைப்பும் –விடாமுயற்சியும்
உள்ளவர்களுக்கு
அது
வாய்க்கும் "







# சூழ்நிலைக்கு ஏற்றவாறு எம்மை மாற்றிச் செயல்படுவது நல்ல பண்பாகும்

மனிதவள அபிவிருத்தி ஒரு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு மிக அவசியமான பங்கை வகிப்பதுடன் ஆளுமை விருத்தியையும் மேம்படுத்த உதவுகிறது.

"Education changes the world" என்ற கொள்கைக்கு அமைவாகவும், மனிதவள அபிவிருத்தியின் தத்துவத்திற்கு ஏற்பவும் WUSC நிறுவனம் தொழில்சார் பயிற்சி நிறுவனமான அறவழிப்போராட்டக்குழுவுடன் பங்கேற்பு முறைமையான தத்துவத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தியை மனிதவள அபிவிருத்திக்கு ஊடாக முன்னெடுக்கவும் தத்துவ ரீதியாக அடையக்கூடிய தொழில்சார் பயிற்சிச் செயற்திட்டத்தை 30மாத கால பகுதியில் நடைமுறைப்படுத்தியதன் விளைவே இன்றைய நிகழ்வை உருவாக்க முன்னோடியாக அமைந்துள்ளது.

படிப்பினைகளை ஆதாரமாக வைத்து மனிதவள அபிவிருத்தியுடன் பௌதீகவள அபிவிருத்தியும் சமச்சீராக செயல்படுத்தப்படும் பட்சத்தில் நிறுவனங்களை பேண்தகு நிலைக்கு உள்வாங்கி நிறுவனமயப்படுத்த முடியும் என்ற கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இரண்டு மாடிக்கட்டட வளாகத்தையும், மனிதவள அபிவிருத்திக்கு முன்னோடியாக வள மையத்தையும், தொழில் வல்லுனர்களை (SKILL WORKERS) உருவாக்குவதற்கான பௌதீக வளத்தையும், அறவழிப்போராட்டக்குழு தனது தொலைநோக்கை மையமாக வைத்து முன்னெடுத்துச் செல்வதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

WUSC இன் தூரநோக்கு சிந்தனையில் பங்குதாரர்கள் (PARTNERSHIP) என்பது முதல் தரத்தில் வகுக்கப்பட்டு அதன் தத்துவமும், அதனை அடைய முற்படும் செயற்பாடுகள் எவ்வகையில் அமைய வேண்டும் என்பதற்கு அறவழிப்போராட்டக்குழு நிறுவன மாற்றத்தை நாம் ஓர் சான்றாக பார்க்கலாம். 11

சூழ்நிலையை காரணம் காட்டிக்கொண்டு இருக்காமல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு எம்மை மாற்றிக்கொண்டு செயற்படுவது ஓர் நல்ல பண்பாகும். அதன் அடிப்படையில் அறவழிப்போராட்டக்குழுவின் முகாமை செயற்பட்டமையே குறுகிய காலத்தில் அறவழிப்போராட்டக் குழுவின் மாற்றத்திற்கான (IMPACT) காரணமென அபிவிருத்தியாளன் என்ற வகையில் எனது கருத்தாகும்.

பணி செய்யத் தெரியாதவர் எவ்வாறு பணி செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு இருப்பார். பணிசெய்யத் தெரிந்தவர் தமது பணியை செவ்வனே செய்துகொண்டு செல்வார். அவ்வழியில் செல்லும் அறவழிப் போராட்டக் குழுவின் செயலாளர் திரு. எம். கே. ஜீவகதாஸ் அவர்களின் அயராத பணியை அபிவிருத்தியாளன் என்ற வகையில் அவரைப் பாராட்டுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.


அதேபோல் அவரோடு இணைந்து செயற்படுகின்ற அனைத்து நல்லுள்ளங்களையும் அறவழிப் போராட்டக்குழு என்ற அமைப்பு தொடர்ந்தும் தமது தொலைநோக்கில் செல்வதற்கு சமுதாய உணர்வுமிக்கவர்களை உருவாக்கவேண்டும் என்பது எனது ஆலோசனையாகும்.

அறவழிப் போராட்டக்குழுவின் வளர்ச்சியிலும், யாழ் மாவட்டத்தின் அபிவிருத்தியிலும் நானும் எனது அமைப்பும் பங்கெடுத்துக்கொள்ளும் வாய்ப்பை வழங்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் நல் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இந்த செயற்பாடு தொடர எல்லாம்வல்ல திருகோணமலை கோணநாதப் பெருமான் பாதங்களை வணங்கி இன்றைய நிகழ்வுகளில் இருந்து விடைபெறுகின்றேன்.

சமூகப் பணியில்

**வே. ஜெயராஜசிங்கம்.**

பிரதி வெளிக்களப் பணிப்பாளர்.
வட பிராந்தியம்
WUSC- SL



"ஒருவனுக்கு

ஒரு மீனைக் கொடுத்தால்

ஒரு நாளைய உணவைக்

கொடுக்கின்றோம்.

மீனைப் பிடிக்கக்

கற்றுக் கொடுத்தால்

வாழ்நாள்

முழுவதும்

உணவு

கொடுத்தவராவோம்"





**Dr. A. T. ARIYARATNE**
**Founder - President**
**SARVODAYA SHRAMADANA MOVEMENT**

# NVDAG HAS BEEN CLOSE TO MY HEART

I am delighted that Nonviolent Direct Action Group is moving into a new home put up with assistance of World University Service of Canada. I am happy to felicitare on this occasion both the NVDAG and WUSC whom I consider as models to follow in the field of non - violent constructive action.

I Know from its very inception in Canada and Srilanka and have had close links with them to this day. Similarly Mr. M.K. Jeevagathas and NVDAG have been close to my heart also from their very begining

In a society full of conflict division and violence it is extremely difficult to be above all those and fearlessly practice nonviolence. This is exactly what NVDAG has proven in their long history.

On behalf of the Sarvodaya Shramadana Movement I wish you continued success and urge you to work tirelessly to contribute to bring about once again peace and harmony in our beloved land.

***Dr. A.T.Ariyaratne***
President.



*Assume responsibility for your actions.
When you decide to act in a particular
Way You should be prepared to face
consequences of your action
As we sow we reap. Our rewards depend
on the contribution we make.
The place you now occupy is the result
of your own efforts.
If you feel you are bound by shackles
you have to break them to gain
independence.
you cannot expect someone else to do
your job for you
you have to stand on your own legs
to prove your growth and stature*








# இன்னலுற்ற மக்களை அரவணைக்கும் நிறுவனம்

அறவழிப் போராட்டக் குழுவினுடைய புதிய கட்டடத் திறப்புவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மஞ்சரிக்காக ஆசிச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்வு எய்துகின்றேன்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் 1979ம் ஆண்டு முதல் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமாக இயங்கி வரும் அறவழிப்போராட்டக்குழுவானது தர்மத்தின் வழிகாட்டியாக இன்னலுற்ற மக்களை எவ்வித வேறுபாடின்றி அரவணைத்து அவர்களின் தேவைகளை இனங்கண்டு நிறைவேற்றி அரும்பணி செய்து வருகின்றது. இப் பிரதேச மக்களின் சமூக முன்னேற்றத்திற்காகப் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுத்து வந்துள்ளது. வறிய விவசாயிகளுக்கு உதவி வழங்குதல், பெண் தலைமைத்துவக் குடும்பங்களிற்கான சுயதொழில் ஊக்குவிப்பு, சிறுவர்களுக்கான கல்வி மேம்பாட்டுச் செயற்திட்டங்கள், இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி எனச் சகல மக்களின் மேம்பாட்டிற்கும் உதவி வழங்கிச் செயற்பட்டு வந்துள்ளது.

இந்நிறுவனத்தின் இவ்வாறான சேவையையும், பணிபுரிந்த அனைவரையும் வாழ்த்துவதுடன் எதிர்வரும் காலங்களிலும் அறவழிப் போராட்டக் குழுவின் பணிகள் சமூகத்தின் அடித்தளம் வரை ஊடுருவிச் சென்று செயற்படும் எனவும் நம்புகின்றேன். கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவையின் அனுசரனையோடு அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தின் வேலைகள் நிறைவுற உழைத்த அனைவரையும் பாராட்டுவதுடன், இந்நிறுவனம் புதிய கட்டடத்திலே புது மெருகுடன் மக்களுக்கு மென்மேலும் சேவைகள் பல செய்து தென்மராட்சிப் பிரதேசத்தில் இணையற்ற மக்கள் தொண்டு நிறுவனமாக மிளிர வேண்டுமெனவும் இறைவனின் ஆசியை வேண்டுகிறேன்.

*செ. ஸ்ரீநிவாசன்*
பிரதேச செயலர்
பிரதேச செயலகம்
தென்மராட்சி. சாவகச்சேரி.



“வாழ்க்கையின் நெருக்கடி

நிலவரங்கள் பொதுவாக

நம்மை முட்டுச் சந்தில்

கொண்டு வந்து விடுகின்றன.

அங்கிருந்து எந்தத் திசையில்

பயணப்படுவது என்பதை

தீர்மானிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு

ஆளாகிறோம்.

ஒரு பாதை

நம்பிக்கையின் அடையாளக்குறியாக

அமைந்துள்ளது.

இன்னொரு பாதை

பயம் சூழ்ந்ததாக அமைந்திருக்கிறது.

என்ன காரணத்தால்

பெருவாரியான மக்கள்

பயம் சூழ்ந்திருக்கும் பாதையில்

பயணப்படுகிறார்கள்?

இதைத் தீர்மானிப்பது—அவர்களின்

மனோபாவம் தான்”





COUNCIL OF NGOs, JAFFNA.

# முன்னோடி நிறுவனம்

# அறவழி

அறவழி போராட்டக்குழு தமக்கென நிரந்தர பணிமனை கட்டிடத்தை அமைத்து திறந்து வைப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். யாழ்ப்பாண மாவட்டத்திலே சொந்தமாக நவீன வசதிகளுடன் கூடிய கட்டிடத்தை கொண்ட முழுமையான முன்னோடி நிறுவனமாக அறவழிப்போராட்டக்குழு விளங்குகின்றமை பெருமைக்குரியது.

சமூக விழிப்புணர்வுக்காக ஆரம்பித்து படிப்படியாக பாதிக்கப்பட்ட பல்வேறு தர மக்களுக்கும் உதவிக்கரம் நீட்டி சேவையாற்றுகின்ற ஒரு நிறுவனமாக இந்த அமைப்பு வளர்ச்சியடைந்து அதன் இருப்பை நிலைநாட்டியுள்ளது. இந் நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் கட்டிட அமைப்புக்கும் நிதி ஆதாரத்தையும் வேறு ஆதரவுகளையும் வழங்கும் நிறுவனங்களுக்கு எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் மேலும் குறிப்பாக இக் கட்டிடப்பணிக்கு நிதியுதவி வழங்கிய கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத்திற்கு எமது நன்றியும் பாராட்டும்.



அதே போல் இந் நிறுவனத்தின் பல்துறை செயற்பாடுகளையும் நெறிப்படுத்தி செயற்படுத்துகின்ற நிர்வாகத்தினருக்கும், பணியாளர்களுக்கும், தொண்டுப் பங்காளர்களுக்கும் எமது பாராட்டுதல்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

**சி.வி. கந்தையா சிவஞானம்**

கௌரவ தலைவர்

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்


40, கோவில் வீதி

யாழ்ப்பாணம்.



"நிர்வாகம் என்பது
ஏணியில் ஏறுவது .
தலைமை என்பது
ஏணியைச் சரியான
சுவற்றில்
சார்த்துவது"







## Save the Children
in Sri Lanka

# காலத்தின் தேவையை அறிந்து செயல்படும் நிறுவனம்

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவினால் 1979ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அறவழிப் போராட்டக்குழு என்ற நிறுவனம் அன்று தொடக்கம் இன்று வரை பல்வேறு காலகட்டங்களிலும், பல சிரமங்களுக்கு மத்தியிலும் தென்மராட்சி பிரதேச மக்களுக்காக மட்டுமன்றி– யாழ் மாவட்ட அனைத்து மக்களுக்கும் நன்னாலான சேவைகளை வழங்கி வந்துள்ளது.

அன்று ஒரு தனியார் வீட்டில் இயங்கி வந்த இந்நிறுவனமானது தனக்கென ஓர் செயலகத்தைத் திறக்கும் நிலையில் இருப்பதற்குக் காரணம் இந்நிறுவனத்தின் செயற்பாட்டிற்குக் கிடைக்கப்பெற்ற ஒரு வெளிப்பாடாகும்.



1990 ஆம் ஆண்டு காலப்பகுதிகளிலும், தொடர்ந்த இடப்பெயர்வின்போதும் இந்நிறுவனத்தின் நிர்வாகமும் – பணியாளர்களும் தம்மாலான சேவைகளை வழங்கி நலிவுற்ற மக்களுக்காக தமது நேரத்தை அர்ப்பணித்தனர்.

தொடர்ந்து வந்த காலகட்டங்களில் Save the Children in Srilanka பங்காளித்துவத்துடன் மீளக்குடியேறிய மக்களுக்கும் – அதைத் தொடர்ந்து சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் தமது சேவைகளை வழங்கினர்.

இன்றைய காலகட்டத்தில் – காலத்தின் தேவையை அறிந்து மக்களுக்குரிய தேவைகளை இனங்கண்டு – அவர்களின் பங்களிப்புடன் அறவழிப் போராட்டக்குழு மேலும் தனது சேவையை விஸ்தரிக்கவேண்டும் என்றும் எவ்விதமான தடைகளும் இல்லாமல் அறவழி தனது சேவையை மக்களுக்கு ஆற்ற வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

***சு.க. மகேந்திரன்***
பிரதி முகாமையாளர்
Save the Children in Srilanka
யாழ்ப்பாணம்.



"நம்மை நாமே தாழ்த்திக்
கொண்டு இருப்பதில் நமக்குப்
பயன் ஏதும் இல்லை.
ஆனால்----------------
அதே சமயம்--------
நாம் சமூகத்தில் ஒரு
முக்கிய நபர்,
நம்மாலும் சில விடயங்களைச்
சாதிக்கமுடியும் - என்று
எண்ணுபவர் நிச்சயம்
சில சாதனைகளைக் செய்து முடிப்பார்.
எனவே ------
என்ன நினைக்கிறீர்களோ
அது தான்
உங்களைச் செயல்பட வைக்கிறது.

அப்படிச் செயல்படும்போது
உங்களுக்கும் சில
அங்கீகாரங்கள் வந்து சேர்கின்றன.
மனதுக்குள் உற்சாகமாக உணருங்கள்
உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு
உற்சாகம்
தொற்றிக் கொள்ளும்"



IOM International Organization for Migration

# மனிதாபிமானப் பணிகளை முன்னெடுக்கும் நிறுவனம்

அறவழிப் போராட்டக் குழுவின் கட்டட திறப்புவிழா மஞ்சரி வெளியீட்டுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கெயர் நிறுவனத்திலும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்திலும் பொறுப்பாளராக சேவையாற்றிய 15 வருட காலத்தில் அறவழிப் போராட்டக் குழுவுடன் இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை தென்மராட்சி பகுதியில் செயற்படுத்தியிருந்தோம். தொடர்ந்தும் UN-IOM நிறுவனத்தில் பொறுப்பாளராக இருக்கின்ற காலத்தில் மீண்டும் இந்நிறுவனத்துடன் இணைந்து இரண்டு வருடங்களாக சிறந்த முறையில் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.



நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் நிகழ்ந்த இடப்பெயர்ச்சி அச்சுறுத்தல்கள் மத்தியிலும் பல்வேறு மனிதாபிமான பணிகளை இந்நிறுவனம் மிகுந்த சாதுரியத்துடன் முன்னெடுத்து வருவது பாராட்டத்தக்கது. தற்போது இளைஞர் யுவதிகளின் ஆற்றலை மேம்படுத்தும் வகையில் இந்நிறுவனம் மேற்கொண்டுவரும் பல்வேறு வேலைத்திட்டங்கள் தற்போதைய சூழ்நிலையில் வாழ்வாதார மேம்பாட்டுக்கு மிக உகந்ததாகும்.

அறவழிப் போராட்டக் குழுவானது மென்மேலும் தனது சேவையை சிறப்பாக மக்களுக்கு வழங்கும் பணிகளை விரிவுபடுத்த எமது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கி.அ.அருள்ஞானம்**

*தலைமை அதிகாரி,*
*IOM*
*யாழ்ப்பாணம்.*



“தங்கள் சூழ்நிலையை
மேம்படுத்திக் கொள்ள
வேண்டும் என்று
மனிதர்கள் பதற்றப்படுகிறார்கள்.
ஆனால்-----
தங்களை மேம்படுத்திக்
கொள்வதில்லை.
எனவே
சூழ்நிலையின்
கைதிகளாக
அவர்கள்
வாழ்கிறார்கள்.”







# பணிகள் போல் பணித்தளம் வளர ஆசிகள்

**சாவகச்சேரிப் பகுதியில் இயங்கும் அறவழிப் போராட்டக்குழுவின் பணிகள் பல நெருக்கீடுகள் மத்தியில் தேவைகள் உணர்ந்து செயற்படும் சேவைகள் பாராட்டுக்குரியது.**

**காலத்திற்கு ஏற்ற நவீன யுகத்தை எதிர்கொள்ளும் முயற்சிக்கு நிரந்தர பணித்தளத்தின் தேவை உணர்ந்து கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் உதவியால் உயர்ந்து நிற்கும் புதிய அறவழி செயலகக் கட்டிடம் மக்களின் உயர்விற்காய் உழைக்கும் சிறந்த பணித்தளமாக துலங்க வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.**

**அறவழிப் போராட்டக்குழுவின் பணிகள் பற்றி கடந்த 10ஆண்டுகட்கு மேலாக நான் நன்கு அறிவேன். தலைவர், ஊழியர்களின் அர்ப்பணிப்பு, செயல் திறன் என்றும் பாராட்டுக்குரியது.**

**அறவழிப் போராட்டக்குழுவின் பணிகள் சிறக்க இறை ஆசிகள் வேண்டி நிற்பது.....**


## அருட்பணி கி. யோ. ஜெயக்குமார்.

இயக்குனர்,
கரித்தாஸ் - கியூடெக்
யாழ்ப்பாணம்.




"வாழ்க்கையில் நாம்
கற்கவேண்டியவை
நான்கு.
குழப்பத்திற்கு இடம்
கொடாத தெளிவான
சிந்தனை.
அனைவரையும் நிஜமாகவே
நேசிப்பது.
உயர்ந்த இலட்சியங்களுடன்
செயற்படுவது.
தயக்கமின்றிக் கடவுளை
நம்புவது"





# சமூக மேம்பாட்டுக்கு உழைக்கும் நிறுவனம்

அறவழிப் போராட்டக்குழு பல ஆண்டு காலமாக சமூக மேம்பாட்டிற்காக உழைத்து வருகின்ற ஓர் உன்னத நிறுவனமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக சமூகப்பணி என்கின்ற போது பாலர் கல்விக்கழகங்களை நிறுவி அதனூடாக பாலர் கல்வி விருத்தியினை மேற்கொள்வதும், சுயதொழில் வேலைவாய்ப்பு நிறுவனமாகவும் இன்று வளர்ச்சிகண்டு வருவது போற்றத்தக்கதும், பாராட்டத்தக்கதுமாகும். இன்று இந்த இக்கட்டான காலகட்டத்திலும் தனது பணியினை செவ்வனே செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இளைஞர், யுவதிகள் போன்றவர்களுக்கு தொழில் நுட்பத்தினை இலவசமாக கற்றுக் கொடுத்து வேலைவாய்ப்பினை பெற்றுத்தருகின்ற சேவைக்காக கனேடிய உலகப் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் நிலையான ஒரு கட்டிடத்தினை பெறுவதனையிட்டு மகிழ்வு அடைகின்றேன். இதனூடாக அதனது செயற்பாடுகள் விரிவாக்கம் பெறுவது திண்ணம். குறிப்பாக இன்று எம் பகுதியில் அறவழிச் செயற்பாட்டை பன்முகப்படுத்தும் முகமாக இந்நிறுவனத்தின் உறுப்பினர்கள் பாடுபடுவதனை அவதானிக்க முடிகிறது. செயலாளர் எம். கே. ஜீவகதாஸ் அவர்கள் தனது முயற்சிகள் அனைத்தினையும். இந் நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இன்று கட்டடத் தொகுதியினைப் பெறும் இந்நிறுவனம் தன்பணியினை உலகம் போற்ற நடாத்தும் என்பதில் ஐயமும் இல்லை. இதுபோன்ற நிறுவனத்தின் வளர்ச்சிக்கு எமது ஆதரவும் பங்களிப்பும் என்றும் உண்டு எனக்கூறி வாழ்த்தி ஆசி கூறி பயனுள்ள விருட்சமாக வளர வாழ்த்துகின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



**கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்.**

நல்லை ஆதீன சிவாச்சாரியார்.


நுணாவில் மேற்கு,

சாவகச்சேரி.



“வாழ்க்கையில் நாம்
கற்கவேண்டியவை
நான்கு...
குழப்பத்திற்கு இடம்
கொடாத தெளிவான
சிந்தனை,
அனைவரையும் நிஜமாகவே
நேசிப்பது,
உயர்ந்த இலட்சியங்களுடன்
செயற்படுவது,
தயக்கமின்றிக் கடவுளை
“நம்புவது,”







# காலத்தின் தேவைக்கு ஏற்பச் செயல்படும் நிறுவனம்

அறவழி செயலக புதிய கட்டட திறப்பு விழா மஞ்சரி வெளியீட்டுக்கு அறவழிப் போராட்டக்குழுவை வாழ்த்தி ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். 1979ம் ஆண்டு தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் மக்களுடைய குறைகளை அன்பு, அகிம்சை, எளிமை வழியில் நிறைவு செய்து மக்களுடைய தேவைகளை இனங்கண்டு நிவர்த்தி செய்வதற்காக யாழ் மாவட்டத்திலுள்ள சமூக பெரியார்களினால் தென்மராட்சியில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்ப கால முதல் தமிழ் மக்களின் குறைபாடுகளை இனங்கண்டு அறவழி, அகிம்சை வழி, எளிமை வழியில் போராடி குறைகளை போக்கியது. 1983ம் ஆண்டு இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அகதி முகாம்களை அமைத்து அவர்களை பராமரித்தது. சிறுவர் நலன்களில் அக்கறை கொண்டு சிறுவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி கருத்தரங்குகளை நடாத்தி அவர்களின் ஆரம்பக் கல்விக்காக பல பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றனர். சுனாமியால் யாழ் குடாநாட்டின் கரையோரம் பாதிக்கப்பட்டபோது அங்கும் அம்மக்களின் வாழ்வை உயர்த்த பல பணிகளை மேற்கொண்டனர். அரச சார்பற்ற நிறுவனங்களின் துணையுடன் பணிகளை மேற்கொண்டனர். காலத்தின் தேவைகளை இனம் கண்டு மக்கள் மத்தியில் பணியாற்றி வந்தனர். 1979 முதல் யுத்த சூழலில் நமது மாவட்டம் பாதிப்புக்குள்ளானதால் வாலிபர் மிகவும் பாதிக்கப்பட்டனர். கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத்துடன் இணைந்து அறவழிப் போராட்டக்குழு பல தொழில் பயிற்சி செயற்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றனர். இப்பயிற்சியின் மூலம் இளைஞர்கள் சுயதொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதுடன் நன்கு தரமான பயிற்சியின் மூலம் சமூகமும் தரமான சேவைகளை பெற வழி கோலியுள்ளது. நெருக்கடியான காலகட்டத்தில் வசதியான இளைஞர் நாட்டைவிட்டு போகின்றபோது வசதி குறைவான குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக் குழுவும் கனேடிய உலக பல்கலைக்கழக நிறுவனமும் செய்கின்ற பணி மிகவும் பாராட்டத்தக்கது.

யுத்த சூழல் நெருக்கடிகள் மத்தியில் அறவழிப் போராட்டக்குழு 29 வருடங்களாக சமூகத்திற்கு செய்யும் பணிகளை நான் சார்ந்த திருச்சபை ஊடாக வாழ்த்துகிறேன். கடவுள் அறவழி போராட்டக் குழுவை, அவர்களின் பணிகளை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.



**வண. பொ. யோ. சூரியகுமார்.**
மிசன் இல்லம்.
அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபை, நூணாவில்.



"ஒரு சிறு செடி
விதையில்லாமல் எப்படி
துளிர்த்து எழுவதில்லையோ
அதுபோல்
மனிதனது ஒவ்வொரு
செயலும் – அவனது எண்ணம்
என்கிற மறைந்துகிடக்கும்
விதைகளில்லாமல்
கிளம்புவதில்லை.
அந்த எண்ண
விதைகள்
இல்லாமல்
செயல்
வடிவம் பெறாது"







# நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கு வழிவகுக்கும் நிறுவனம்

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் அறவழிப் போராட்டக் குழுவின் யாழ் மாவட்ட அலுவலகக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு இன்று திறப்பு விழா நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். யாழ் மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளின் குறிப்பாக இளைஞர் யுவதிகளுக்கான தொழில் பயிற்சிகளை வழங்குவதில் இந்நிறுவனமானது கடந்த காலங்களில் பல்வேறு வேலைத்திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது. அத்துடன் இந்நிறுவனத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் வாழ்வாதாரச் செயற்திட்டங்கள், சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் என்பன நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத்தர உயர்விற்கு வழிவகுத்துள்ளது.



இந்நிறுவனத்தின் சேவைகள் எதிர்காலத்தில் சிறப்பாக முன்னெடுக்கப்படுவதற்கும் பிரதேச அபிவிருத்தியில் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதன் ஊடாக அபிவிருத்தியின் பங்காளர்களாக உருவாக முடியும். கட்டடத் திறப்புவிழா சிறப்பாக நிறைவேற எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இந்நிறுவனமானது நீடித்து நிலைத்திருக்கும் வளர்ச்சியினைக் கண்டு இன்னும்பல சேவைகளை ஆற்ற எல்லாம்வல்ல இறைவனின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**சி. சத்தியசீலன்.**


பிரதேச செயலர்,
கரவெட்டி.



"நிர்வாகிகளின்
மனப் போக்கின்படி
நிர்வாக முறைகள் மாறுகின்றன
நிறுவனங்களை
ஜீவனுள்ளவையாகப் பார்ப்பவர்கள்
சிலர்.
வெறும் ஆவணங்களாகப்
பார்ப்பவர்கள்
சிலர்."







CONSORTIUM OF
CHA
HUMANITARIAN AGENCIES

# NVDAG MAINTAINS HEALTHY NETWORK

I am indeed delighted to send this messages to the souvenir to be published in connection with the opening of a new building for the secretariat of the NVDAG

We all aware that NVDAG has been playing a signiificant role in the social development in the face of momentous challenges. They have helped to facilitate achievements in basic human development in a most needed era at a most difficult area.

They have also been on the front line in the fight for Child Rights, Equality, peace building, capacity development and social justice. They certainly play a key role in the implementation of capacity development of youths.

One of their major strengths however lies in their ability to maintain a healthy network with other organizations and development partners.

I got the chance to observe since I have been taking a role in their funding agencies for the last four years. Real interest and Commitment on community service is the unique identity of NVDAG. These two factors which I observed from NVDAG are the secrets of their growth in the development sector.

Your commitment to the challenge to change continues NVDAG a defining institution of service to others is highly appreciated. Best wishes in your continued service.

"There is no knowing who you are unless you know what you stand for Stephaine Dowrick."

*T.T.Mayooran.*
Programme Officer.
Consortium of Humanitarian Agencies (CHA)
# 86 Rosemead place,
Colombo _ 07



*"Don't escape from situations when they are adverse . You must develop the skill of adaptability to changing times and circumstances.*

*Adaptability is very important not only for survival but to go up in life.*
*Accept any crisis in life as normal. consider adversity but,....*
*Failure as corrective feedback*
*Develop critical attitude for success.*
*Don't run away from challenges. have the conviction*
*You are the master of your own destiny"*





# மக்களின் தேவைகளை இனங்கண்டு உதவும் நிறுவனம்

தென்மராட்சிப் பகுதியில் கடந்த 28 வருடங்களாக மக்கள் சேவையாற்றிவரும் "அறவழிப்போராட்டக்குழு" தொண்டர் நிறுவனத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவின் போது ஆசிச்செய்தி தெரிவிக்கையில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நிறுவனத்தின் ஆரம்ப காலப்பகுதியில் தென்னிலங்கையிலிருந்து பாதிக்கப்பட்டு இப்பகுதிக்கு மக்கள் இடம்பெயர்ந்து வந்தபோது அவர்களிற்கான உடனடி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததுமல்லாது அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியமையின் பெருமை இந்நிறுவனத்திற்கே உரியதும் பாராட்டப்பட வேண்டியதுமாகும்.

அது மட்டுமல்லாது எமது பிரதேசத்தில் காலத்திற்குக் காலம் ஏற்படும் இடப்பெயர்வுகள், மீளக்குடியமர்வுகளின்போது மக்களின் தேவைகளை இனங்கண்டு உடனடி உதவிகள் செய்வதுடன் வறிய மக்களின் இடர்களை நீக்க பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளனர். 33 இன்றைய காலகட்டத்திற்கேற்ப இளைஞர், யுவதிகளுக்கான நவீன தொழிற்பயிற்சிகளை வழங்கி அவர்களின் எதிர்காலம் சிறப்புற வழிவகுத்துள்ளமை, தற்போதைய பொருளாதார நிலையில் வாழ்க்கையில் மீளமுடியாது என ஏங்கித் தவிக்கும் பெண்களைத் தலைமைதாங்கும் குடும்பங்களிற்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவியுள்ளமை போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டு நிறுவனத்தின் வளர்ச்சியில் பங்கேற்ற அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

மேலும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் சேவைகளின் வளர்ச்சிக்கேற்ப அமைவிடத்தின் கட்டடமும் புதுப்பொலிவுபெற்று திறப்புவிழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் அறவழிப்போராட்டக்குழு நிறுவனமானது எதிர்காலத்தில் மக்களிற்கு மென்மேலும் சேவைகள் பல ஆற்றுவதற்கு பணிபுரியும் சகலருக்கும் இறைவனின் நல்லாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.


**திருமதி. இ. இரகுநாதன்.**

*உதவி திட்டமிடல் பணிப்பாளர்,*

*பிரதேச செயலகம்,*

*தென்மராட்சி,* சாவகச்சேரி.




"உள்ளிருந்து வரும் வழிகாட்டுதலை

ஏற்றுக்கொள்ள ஏதுவாக எப்போதுமே

திறந்த மனத்துடன் இருங்கள்

உங்கள் திட்டங்களைச்

சீரமைக்கும்படியோ அல்லது

ஒரு புதிய திட்டத்தில்

இறங்கும்படியோ


உங்களுக்குள் பொறி தட்டினால்

தயக்கமோ – சந்தேகமோ

இல்லாமல் உடனடியாக

அதைச்

செயல்படுத்துங்கள்"





## மக்களின் மனங்களில் பதிந்த

## நிறுவனம் – அறவழி

சாவகச்சேரி மக்கள் வங்கியில் கடந்த 30 வருடங்களாக வங்கி நடவடிக்கைகளில் ஈடுபட்டு எமது முதன்மை வாடிக்கையாளராகத் திகழ்ந்து வரும் அறவழிப்போராட்டக்குழு வெளியிடும் சிறப்புமஞ்சரிக்காக ஆசிச் செய்தி வழங்குவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை பெரு மகிழ்வாக ஏற்றுக்கொள்கின்றேன்.

தென்மராட்சி பிரதேசத்தில் மக்களின் மனங்களில் நன்கு பதிந்த ஒரு அரச சார்பற்ற நிறுவனம் அறவழிப்போராட்டக் குழுவாகும். நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் இந்நிறுவனத்தின் செயற்பாடு அமைந்திருப்பதனால் இதன் வளர்ச்சி மிகவும் அபரிதமாக அமைந்துள்ளது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் அறவழிப்போராட்டக்குழுவின் கட்டிடங்கள் – பொருட்கள் என்பன அழிவுற்ற நிலையிலும் அறவழியை மீள இயக்குவதில் இயக்குனர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.



போர்ச் சூழலில் வேலையற்றிருக்கும் இளைஞர் – யுவதிகளின் எதிர்கால நன்மை கருதி இந்நிறுவனம் 2006ஆம் ஆண்டு முதல் தொழில்பயிற்சி துறையில் கால் பதித்தது. பயிலுனர்களின் நன்மை கருதி பல்வேறுவகைப்பட்ட தொழில் பயிற்சிகளை ஆரம்பித்து பயிற்றுவித்ததன் மூலம் பயிலுனர்கள் தங்களுக்கென பல தொழில்வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வதற்கு அறவழிப்போராட்டக்குழு ஊன்று கோலாக அமைந்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார மேம்பாடு போன்றவற்றில் வளர்ச்சியை ஏற்படுத்துகின்ற இந்நிறுவனத்தின் பணிகள் மேலும் வளர்ச்சியடைய எனது நல்லாசிகளும் வாழ்த்துக்களும்.

**க.சண்முகலிங்கம்**

*முகாமையாளர்*

*மக்கள் வங்கி*

*சாவகச்சேரி.*



“வாழ்க்கையின் மேன்மையான
விடயங்களை அடையவேண்டும் என்ற
தாகம் நம் அனைவரின்
பொதுவான ஆசை.
பொருளாதாரம், பாதுகாப்பு என்ற
நமது ஆசையைப் பணத்தால்
மட்டுமே நிறைவேற்றிக் கொள்ள
முடியும்.
நமக்கே சொந்தமான செழிப்பை
வசதி வாய்ப்புக்களை
சுபீட்சத்தை உருவாக்கிக்
கொள்ள வேண்டும்”





# சமூக அபிவிருத்தியில் கலங்கரை விளக்கு – அறவழி

அறவழி போராட்டச் செயலக புதிய கட்டடத் திறப்புவிழா மஞ்சரிக்கு வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் ஆசியைத் தெரிவிப்பதில் அளவிலா மகிழ்ச்சி அடைகிறது.

அகிம்சை வழியாக ஜனநாயகம் எனும் விருட்சத்தை வளர்த்தெடுக்கும் அறவழிப் போராட்டக்குழு தமது திட்டங்களை நெறிப்படுத்துவதற்கு நிரந்தர அலுவலகம்" இல்லாதது பெரும் குறையாகவே இருந்து வந்தது.

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் நிதி உதவியுடன் இக்குறை நிவர்த்தியாக்கப்படுவது அறவழிப்போராட்டக்குழு தமது செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு ஒரு ஏணியாக அமையும் என்பதில் ஐயமில்லை.


ஊடகத் துறையில் ஆற்றலும், அனுபவமும் மிக்க எமது முன்னை நாள் செயலாளர் திரு.எம்.கே.ஜீவகதாஸ் இம் மஞ்சரியின் அச்சாணியாக அமைந்திருப்பது ஊடகத் துறைக்கு பெருமை சேர்த்துள்ளது.

அறவழிப் போராட்டக்குழுவின் செயற்கரிய திட்டங்கள் கைதடி, நுணாவில் கிராமங்களின் எழுச்சி, இளைஞர்களின் தொழில் பயிற்சி, மாணவர்களின் கல்வி வளர்ச்சி, மங்கையர்களின் ஆளுமை விருத்தி ஆகியவற்றுக்கும் இன்னோரன்ன சமூக அபிவிருத்திகளுக்கும் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. இவையாவும் காலத்துக்குக் காலம் படம்பிடித்து அறவழிப் போராட்டக்குழுவின் செய்தித் தாள்களில் வெளிவந்தன. அவை இம் மஞ்சரியில் தொகுக்கப்பட்டுள்ளது காலத்தின் தேவை ஆகும்.

இந்நூல் வெளியீடு சிறப்புடன் நடைபெற இறைவனின் நல் ஆசிகளை வேண்டி அமைகிறேன்.

**செ.கதிர்காமத்தம்பி J.P.**
தலைவர்,
வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம்
யாழ்ப்பாணம்.

"பத்திரிகையையும்
வானொலியையும்
வெள்ளித் திரையையும்
அதிகம் படிக்கப்படும்
இதழ்களையும்
எவர்கள்
ஆள்கிறார்களோ
அவர்களே
நாட்டையும்
ஆள்கிறார்கள்"





# மக்கள் நலனுக்காக உழைக்கும் நிறுவனம்

மக்களுக்கான நலனை கருத்திற் கொண்டு தனது சேவையை முன்னெடுத்துச் செல்லும் அறவழி போராட்டக்குழு தமது சேவையை விஸ்தரிக்கும் நோக்குடன் இன்று புதிய கட்டட திறப்பு விழாவை கொண்டாடுகின்றது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் கட்டட தொகுதி சேதமாக்கப்பட்டு அதன்பின் 2003ல் படிப்படியாக கால் ஊன்றி பின் தொழிற்பயிற்சி அலுவலகம் ஒன்றை திறந்து பல இளைஞர்கள் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பையும் பயிற்சியையும் வழங்கி வருவது போற்றுதற்கு உரியதாகும்.

சாதனம் இன்றி ஒன்றைச் சாதிப்பார் உலகிலில்லை
ஆதலால் இந்த நான்கும் அறிந்தவர்க்கு அறிவுண்டாகும்
நூதன விவேகி உள்ளே நுழையாது நுழையுமாயின்
பூதசென்மங்கற்கோடி புனிதமும் புருடனாமே

எக்கருமங்களை செய்யினும் செய்தொழிலுக்குரிய கருவிகள் அவசியம் தேவை. அதற்குரிய சாதனங்கள் இன்றி எத்தொழிலும் செயற்படா. இகமாகிய உலகை விசாரணை செய்தல், பரமாகிய முத்தியை விசாரித்தல், உண்மையையும் பொய்யையும் தீர விசாரித்தல் இதில் மனம் அமைதியடையும்.

“அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது” என்ற சிவஞானசித்தியார் பாடலுக்கு அமைவாக ,எமது அறவழிப்போராட்டக்குழு என்றும் தமது சேவையைப் பெருக்கி பல்லாயிரம் மக்களுக்கு வழிகாட்டி பல்லாண்டு காலம் வாழ சாவகச்சேரி அரிமாக்கழகம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

லயன் வீ.மகாலிங்கம்,

*தலைவர் (2008 - 2009)*
*அரிமாக்கழகம்,*
*சாவகச்சேரி.*



“இன்று நாடு இருக்கும்
அவல சூழ்நிலைக்கு
பெரும்பான்மையோர்
கொண்டிருக்கும்
எண்ணங்கள் தான் காரணம்.
மனித சமுதாயம்
என்பது
கூட்டு எண்ண சக்தியை
நெறிப்படுத்துவதன் மூலம்
ஒரு நல்ல சமுதாயத்தை
நாம் உருவாக்க முடியும்”





## ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம், நல்ல எண்ணமும் நல்ல சேவையும் வீண்போகாது.

பசுமையும் இயற்கை எழில் வளமும் நிறைந்த நெல்வயல் தென்றல் காற்று இசைக்கின்ற தென்னையுடன் கற்பகத்தருவும் உழவுத்தொழிலுடன் பூர்வீக வளமும் நிறைந்த பாரம்பரியத்தைக் கொண்ட யாழ் தென்மராட்சி பிரதேசத்தில் வாழ்வின் விடிவிளக்கை 29 வருடங்களுக்கு முன் பல பெரியார்களின் சிந்தனையில் உதித்தது இந்த அறவழி போராட்டக்குழு. இப்பகுதிகளில் இடம்பெயர்ந்து இயற்கை அழிவு, வறுமை, பாலர் பாடசாலைக்கல்வி, சுயதொழில் உதவிகள் எனப் பல சேவைகளை செய்து தளராது தனது பாதையில் நடந்து கொண்டிருக்கின்றது.

தனக்கென ஓர் தொழில் நுட்பக்கல்விக்கூடம் அமைத்து, மக்கள் சேவைக்கென செயலகம் அமைத்து, தன்னாட்சி பெற்றுள்ளது. இன்றைய திறப்புவிழாவின்போது நினைவு மஞ்சரி வெளியீடு செய்து அதன் சேவையின் மகிமையை அறியக் கூடியதாக உள்ளது. தொழில் கல்வியைப் பெற்று எல்லோரும் நல்ல வண்ணம் வாழ கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் வெளிக்களப் பணிப்பாளர் ஜெயராஜசிங்கம் அவர்களின் உதவியுடன் பல அபிவிருத்திப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. இப்படிப் பல வழிகளிலும் பல சேவைகளையும் செய்து கொண்டிருக்கும் அறவழி போராட்டக்குழு குடும்பத்தினருக்கும் இதன் ஆணிவேராக சொல்லும் செயலும் அர்ப்பணிப்புடன் தனக்கென்ற கொள்கையுடன் மக்கள் சேவையை செய்து கொண்டிருக்கும் செயலாளர் எம்.கே.ஜீவகதாஸ் அவர்களுக்கும் என் உள்ளம் கனிந்த பாராட்டுக்கள். இவரின் சேவையை கௌரவித்து பாராட்டி சர்வோதய நிறுவனத்தால் விருதும் வழங்கப்பட்டது. இவர்களின் எண்ணம், சிந்தனை, செயல், விவேகம் என்றும் வீண்போகாது.



பாதையில் கல், முள் எல்லாமே இருக்கும். அவற்றை தாண்டிவிட்டால் குறிக்கோளின் நோக்கத்தை அடைந்து விடுவோம். காந்தி வழியில் தனது சேவையை ஆரம்பித்த அறவழிப் போராட்டக்குழுவிற்கும், சர்வோதயத்திற்கும் ஆரம்ப காலத்தின் தொடர்பும் சகோதர பாசமும் உண்டு. தூங்காமல் விழித்திருக்கும் மீனைப் போன்று விழித்த கண்ணுடன் தனது பார்வை முழுவதையும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் அறவழிப் போராட்டக்குழு அறுகு போல் வேர் ஊன்றி. ஆல் போல் தளைத்தோங்கி நல்ல பல சேவைகளை செய்ய எம் உள்ளம் கனிந்த நல்லாசிகள்.

எழுந்திரு! விழித்திரு! இலட்சியத்தை அடையும் வரை ஓயாது இரு!

**அ. கி. சிவசுப்பிரமணியம்**

மாவட்ட இணைப்பாளர்

சர்வோதயம்

யாழ்ப்பாணம்.



“உன்னால் முடிந்த அளவிற்குச்
சிறப்பானதைச் செய்.
கடவுளை நம்பு.
அவரை வழிபடு .
கடவுளுடன் நட.
மனிதர்களை நேசி.
உன் கடமையைச் செய்.
மதிப்புக்குரியவனாகவும்
நேர்மையானவனாகவும் இரு!
நல்ல முறையில் வாழ்.
நல்லதை நினை.
உனக்குள்ளேயே – நீ
அமைதியாக –
நிம்மதியாக –
வாழ்வாய்.”





# சவால்களுக்கு மத்தியில் வளரும் நிறுவனம் அறவழி

தென்மராட்சி மண்ணின் தன்னார்வத் தொண்டு நிறுவனமான அறவழி போராட்டக் குழுவின் புதிய செயலகத் திறப்புவிழாவையொட்டி வெளியிடப்படும் மஞ்சரிக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நீண்டகாலமாகவே இப்பிரதேச மக்களின் சமூகப் பொருளாதாரத் தளத்தையும் வளத்தையும் விருத்தி செய்வதிலும், அனர்த்தங்களின்போது மக்களின் துயர் துடைப்பதிலும் காத்திரமான பங்கினை வழங்கிவரும் இந் நிறுவனத்திற்கு அவசியமாக இருந்த செயலகக் கட்டிடம் கிடைக்கப் பெற்றமை மகிழ்ச்சி தருகிறது. அதனை வழங்கி உதவிய கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத்திற்கு நன்றி தெரிவிப்பதில் அறவழிப் போராட்டக் குழுவுடன் நானும் இணைந்து கொள்கிறேன்.

எழுபதுகளின் இறுதியில் தோன்றி பல்வேறு சவால்களுக்கும் முகங்கொடுத்து வளர்ந்துவரும் இந்நிறுவனம் பாலர் தொடக்கம் பல்கலைக் கழக மாணவர்களுக்கு அவர்களின் கல்விக் கண்ணைத் திறப்பதில் பல்வேறு பணிகளை ஆற்றுவதுடன் பல்வேறு காரணங்களினால் கல்வியைத் தொடரமுடியாதுபோன ஆண் பெண் இருபாலருக்கும் சமத்துவமான முறையில் இன்றைய தேவைகளுக்குப் பொருத்தமான தொழிற் பயிற்சிகளை வழங்குவதுடன் அவர்கள் அத்தொழில்களை நல்லமுறையில் செய்வதற்கான சாதனங்களை வழங்கிவருவது போற்றுதற்குரியதாகும். இம்முயற்சிகளின் ஆரம்பகாலம் முதலே பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து அயராது பாடுபட்டு வரும் திரு. எம்.கே. ஜீவகதாஸ் அவர்களின் பங்களிப்பு பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.



இந் நிறுவனத்தின் பணி வளரவும், சிறக்கவும், பணியாளர்கள் நலன்பெறவும் இறையருளை வேண்டுகிறேன்.

**க. அருந்தவபாலன்**

அதிபர்

யா/டிறிபேக் கல்லூரி

சாவகச்சேரி.



" வாழ்நாள் முழுவதுற்கும்
பிரச்சனைகள் என்பவை
இயல்பான, அவசியமான
பகுதிகள்.
அவற்றை எதிர்த்து நின்று
அவற்றினூடே எண்ணி
அவற்றை
அடக்கி
ஆளுவதன் மூலம்
பிரச்சனைகளைத் தீர்க்கும்
வளர்ச்சி
வலிமையடைகின்றது.
பாஸிட்டிவ் மனநிலையோடு
பிரச்சனைகளை
அணுகுங்கள்"







# சமூகப் பெறுமானத்தை ஈட்டி வரும் அமைப்பு

அறவழிப் போராட்டக்குழுவின் புதிய மாடிக்கட்டடம் கனேடிய சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் நிர்மாணம் பெற்று அதன் திறப்புவிழா நிகழ்வின்போது வெளியீடு செய்யப்படும் இம்மஞ்சரியானது ஒரு வரலாற்றுப் பதிவு ஆவணமாக மிளிர்ந்து மணம் வீசி ஒளிபரப்ப வேண்டுமென வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது பிரதேசத்தின் நெருக்கடியான காலகட்டத்தில் வளம் பெற்ற நாடுகளின் நல்லெண்ணங்கள் காரணமாக பல அரசசார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் காலமறிந்து கைகொடுத்து உதவும் செயற்பாடுகளை மக்கள் சேவையாளன் என்ற வகையில் நன்றியுணர்வோடு நினைவு கூருகின்றேன். அவ்வகையில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அறவழிப்போராட்டக்குழுவினரால் படித்த இளைஞர் யுவதிகள் மத்தியில் முறைசாராக்கல்வி நெறி முறையின் கீழ் வெல்டிங் வேலைகள், மின்சுத்துக்கள் அமைத்தல், அலுமினியப் பொருத்துக்கள் அமைத்தல், தோற்பொருட்கள் உற்பத்தி, நீர்க்குழாய்கள் பொருத்துதல், கணனியின் மென் வன்பாகப் பயிற்சிகள் எனப் பல கற்கை நெறிகளை நடாத்தி சுயதொழில் மூலம் வருமான ஈட்டங்களுக்கு ஏற்ற வகையில் இளந்தலைமுறையினரை இசைவாக்கம் செய்து அவர்களது ஆளுமையினையும் தொழிற்புலமையினையும் வளர்த்து அதன்மூலம் சமூகப் பெறுமானத்தை ஈட்டியிருப்பது காத்திரமான செயற்பாடாக இனங்காணப்பட்டுள்ளது. கல்வியின் நோக்கங்களுள் ஒன்றாக வரைவிலக்கணம் கூறுகையில் தனிமனித ஆளுமையை வளர்த்து தனக்கும், நாட்டிற்கும் நலம் பயக்கும் நற்குடிமகனாக உருவாக்கி சீராக சூழலுக்கேற்ப பொருந்தி வாழக்கற்றுக் கொள்ளல் என்பதனை நிறைவு செய்கின்ற நிறுவனமாக குடாநாட்டின் சகல பிரிவுகளிலும் செயற்படுதலை அவதானிக்கமுடிகிறது.

*"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்*
*ஆயிரம் தொழில் செய்திடுவீரே!*
*பெரும்புகழ் உமக்கே இசைக்கின்றேன்*
*பிரமதேவன் கலையிங்கு நீரே!"*

என்ற புரட்சிக்கவி பாரதியின் கவிதைவரிகளினூடாக நாம் வாழும் சமூகக் கட்டமைப்பில் பல புதிய நுட்பங்கள் நிறைந்த தொழில் வாய்ப்புக்களை மக்கள் மத்தியில் உருவாக்குவதில் படைத்தல் பணி புரியும் பிரம்மாவாக பார்க்க முடிகிறது. வாழ்க நும் பணி.
வளர்க உங்கள் சேவையென வாழ்த்தும்.

*வே. சிவராஜலிங்கம்*

செயலாளர்

சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.



"நீ சாதனை செய்வதற்கு
மூன்று திட்டம் உள்ளது.
உன்னைக் கண்டு பிடி.
உன்னை ஊக்கமடையச் செய்.
உன்னை அர்ப்பணித்துக் கொள்
இவை
மூன்றும்
நல்ல பலன்களைத்
தரும்"







# தென்மராட்சியில் முதன்மைமிக்க நிறுவனம்

1988ம் ஆண்டு மாசி மாதம் 2ம் திகதி சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஐக்கிய இராட்சியத்தில் இரு பெற்றோரையும் இழந்த சிறுவர்க்கான உதவித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருந்ததால் திட்ட அலுவலராக சேர்த்துக் கொள்ளப்பட்டேன். அக்காலப் பகுதியில் தென்மராட்சிப் பகுதியிலுள்ள இரு பெற்றோரையும் இழந்த பிள்ளைகளை இனங்கான அறவழி அமைப்பு உதவியது. 1990ம் ஆண்டளவில் யாழ்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் இருந்தபோது இடம்பெயர்ந்தோர் நிவாரண உதவி வழங்க உதவி புரிந்தனர். இக்காலத்தில் வாழ்வாதாரத் திட்டம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் இவர்களூடாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

தென்மராட்சிப் பகுதியில் முதன்மை வகித்த ஒரே ஒரு அரச சார்பற்ற நிறுவனமாக இது இருப்பதால் இப்பகுதியில் மற்றைய அரச சார்பற்ற நிறுவனங்களும் இதன்மூலம் தன் திட்டங்களை முன்னெடுக்க வாய்ப்பாக இருந்தது. அச் செயல்பாடு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அடிகோலியது.

தலைமைத்துவம் காலாகாலத்தில் மாற்றம் ஏற்பட்டாலும், அலுவலக கட்டமைப்பு செயலாளரின் தலைமையில் ஒரே ஒரு விசுவாசமான நன்றியுடன் செயல்படுவதால் நிறுவனம் மேன்மேலும் வளர்ச்சியடைகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.




இக்கட்டான நிலைகள் நிறுவனத்திற்கு ஏற்பட்டபோதும் சி. வி. கே. சிவஞானம் அவர்கள், திரு யோகநாதன் அவர்கள், திரு ஏ. கே. சிவசுப்பிரமணியம் அவர்கள், தென்மராட்சி பகுதி பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை அவர்கள் நன்றியுடன் நினைவு கூரப்படுவார்கள். அவர்களும் இந்த நிறுவன வளர்ச்சிக்கு உதவியவர்களே.

1997 சித்திரை மாதத்தில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து விலகியபின் பெற்ற அனுபவங்களைக் கொண்டு சிறுவருக்கான அபிவிருத்தி நிலையம் என்னும் நிறுவனத்தை உருவாக்கி சிறுவருக்கான சேவைகள் தொடர்ந்தும் செய்துவருகின்றேன். சிறுவருக்கான அபிவிருத்தி நிலைய செயற்பாடுகள் தொடர்ந்தும் அறவழி அமைப்பினூடாக செயற்படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றது.


**த. பாலதயானந்தன்**

ஒழுங்கமைப்புச் செயலாளர்,
சிறுவருக்கான அபிவிருத்தி நிலையம்
76 அம்மன் கோவில் வீதி, கொக்குவில்.

"ஆராய்ச்சி என்பது
மக்கள் நேற்று என்ன
நினைத்தார்கள் என்பது
பற்றியே சொல்கிறது.
நாளையைப் பற்றியல்ல.
ஆராய்ச்சியை மட்டும்
அடிப்படையாகக் கொண்டு
செயல்படுவது
சாலையின் பின்பகுதியைக்
காட்டும் கண்ணாடியை மட்டும்
பார்த்துக் கொண்டே
வாகனத்தைச் செலுத்துவது
போன்றது"







# மொழித்திறன் விருத்தியை ஏற்படுத்தும் நிறுவனம்

அறவழி போராட்டக்குழு செய்து வரும் சமூகப்பணிகளை நான் காலாகாலமாக அறிவேன். மாலை நேரங்களில் எழுத்தறிவு குறைந்த பிள்ளைகளுக்கு எழுத்தறிவூட்டல், பயிற்சியை மிகச்சிறப்பாக செய்து மாணவர் மத்தியில் மொழித்திறன் விருத்தியை ஏற்படுத்திய செயற்பாடு இன்றும் என் கண்முன்னால் நிற்கிறது. அதாவது இருபது நிலையங்களைத் தெரிந்தெடுத்து அதற்கு இருபது ஆசிரியர்களை பாடத்திட்டத்திற்கேற்ப பயிற்சி கொடுத்து அதிபர்களை அழைத்து அவர்களுக்கு விளக்கமளித்து இந்த பயிற்சியை சிறப்பாக செய்திருந்தார்கள்.




அதே போல பாடசாலை விலகிய மாணவர்களுக்கு தொழில்திறன் பயிற்சிகள் வழங்கி தொழில் வழிகாட்டிய முயற்சியும் சிறப்பானதாகும்.


இவ்வாறான அர்த்தமுள்ள சேவைகளை செய்து வரும் அறவழிப்போராட்டக்குழு கனேடிய பல்கலைக்கழக நிறுவனத்தின் அனுசரணையுடன் புதிய கட்டடத்தை திறந்து வைக்கும் இதே வேளையில் சிறப்பான நினைவு மஞ்சரி ஒன்றையும் வெளியிடுவது எனக்கு பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. அறவழிப்போராட்டக்குழுவின் மதிக்கத்தகுந்த சேவைகள் மேலும் பெருக வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

**திருமதி.அ.வேதநாயகம்,**
வலயக்கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாண வலயம்.



“ வாழ்க்கையில்
வெற்றி அடைய
வேண்டும்,
நினைத்ததைச்
சாதிக்க
வேண்டும்,
என்றால்
ஆசை–
நம்பிக்கை–
எதிர்பார்ப்பு–
என்ற மூன்று
வலுவான சக்திகளைப்
புரிந்து கொண்டு
அதில்
கைதேர்ந்தவராகி
விட வேண்டும்”





# அர்த்தமுள்ள அறவழியில் நிற்கும் நிறுவனம்

நல்வழி எவ்வழி அவ்வழி செல்வழி என்றவாறு பிறவழி விடுத்து அறவழி நடக்கும் அறவழிப் போராட்டக்குழுவானது ஆரம்பகால அடிப்படை நோக்கத்திலிருந்து வழுவாது ஒழுகும் அதேவேளை போதனையோடு சாதனையையும் பல்கிப் பரவவிட்ட வகையில் பெருந்தருவதுவாய் விரிந்து விளங்குகின்றது. கடந்து வந்த மூன்று தசாப்தங்களிலே இறுதித் தசாப்தமானது சாதனையோடு சோதனையுங் கொண்ட தசாப்தமாக மிளிர்ந்துள்ளது. தொல்லை மலிந்த பொல்லாத போர்ச்சூழலிலே அறவழி அமைப்பும் சிதைந்து சிறுமையுற்றிருந்தது. எவ்வாறாயினும் ஆரம்ப நிறுவுனர்களின் ஆசீர்வாதமும், செயற்றிறன் மிக்க செயலாளர் திரு. எம்.கே. ஜீவகதாஸ் போன்றோரின் அயரா முயற்சியும் அறவழி அமைப்பை மறுமலர்ச்சியுற வைத்துவிட்டது.

அறவழி அமைப்பின் துரிதமான நவீன வளர்ச்சிக்கு செயலாளர் அவர்கள் ஆற்றும் அரும்பணி போற்றுதற்குரியதாகும். பல்துறைத் திறன்மிகு செயலாளர் அவர்கள் எந்தெந்த அமைப்புக்கள் மூலம் நிறுவனத்தை நிமிர்த்தமுடியுமோ அந்தந்த நிறுவனங்களையெல்லாம் அணுகி, ஏற்றம்மிக்க மாற்றத்தை போற்றத்தக்க வகையில் குறுகிய காலத்திலேயே கொண்டுவந்திருக்கின்றார். அந்த வகையிலே கனேடிய உலகப் பல்கலைக்கழகச்சேவை நிறுவனத்தின் நிதியுதவியைப்பெற்று புதிய கட்டமொன்று உருப்பெற்று இன்று திறப்புவிழா நிகழ்வும் இடம்பெறுகின்றது. இந்நிகழ்வையொட்டி வெளிவரும் நினைவு மஞ்சரிக்கு ஆசிச் செய்தி அளிப்பதையிட்டு யான் அளவிலா ஆனந்தம் அடைகின்றேன். 

குறித்துரைத்த பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் உதவியோடு பல்வேறு தொழிற்றிறன் பயிற்சிகளும், உபகரணங்களும் வழங்கப்படுவது எல்லோராலும் பாராட்டத்தக்கதொன்றாகும். குறித்த இவ்வமைப்பின் அளப்பெரும் சேவையோடு வெவ்வேறு பல அமைப்புக்களின் உதவிகளையும் பெற்று , அறவழி அமைப்பானது பன்முகத் தொழில்நுட்ப நிறுவனமாய் மலர்ச்சியுற்றுள்ளது. இந்நிலையில் வினைத்திறன் தொழில் விருத்தியோடு வேலைவாய்ப்பும் விரிவடைகின்ற நிலை உள்ளது. குறைந்த செலவில், நிறைந்த நிலையில், சிறந்த உற்பத்திகள் சந்தையினை வந்தடையும் சந்தர்ப்பமும் கிட்டியுள்ளது. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கவலைதனை விட்டிடல் என்ற வகையில் நிறுவனம் ஆற்றும் அரும்பணி போற்றத்தக்கதாகும்.

போதனையும் சாதனையும் கொண்டு, அறம்காட்டும் திறம்பெற்ற அறவழி அமைப்பு பலரும் பயனுறும் பாங்கில் உயரிய பணியை உரியவாறு மென்மேலும் முன்னெடுக்கும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருந்துவிடமுடியாது. நிறுவனமானது நிறைவான நிலையில் நிமிர்ந்து நிற்க அயராது உழைக்கும் செயலாளர் முதலான அனைத்துத் தரப்பினரும் குறையாத இறையாசியோடு பணியதனைத் தொடர்ந்து புரிந்து அறவழியை அர்த்தமுள்ளதாக்குவது அனைவருக்கும் ஆனந்தம் அளிப்பதொன்றாகும். வாழ்க அறவழிப்போராட்டக்குழு, வளர்க அதன் அயராத அரும்பணிகள்!

**முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம்**

*அதிபர்-யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி,*

*சாவகச்சேரி.*



"வாழ்வின் எல்லா

நிகழ்ச்சிகளிலும்

முயற்சிகள் இருக்கின்றன.

விளைவுகள் இருக்கின்றன.

நமது

முயற்சியின்

வலிமை தான்

விளைவின் அளவுகோல்

அதுதான் உண்மை."





# வறியவர்களுக்குக் கைகொடுக்கும் நிறுவனம்.

அறவழி செயலக புதிய கட்டடத் திறப்புவிழாவை ஒட்டி வெளியிடப்படும் நினைவு மஞ்சரிக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

1979ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட அறவழி போராட்டக்குழு இன்று மூன்று தசாப்தகால சேவையில் இருப்பது மகிழ்ச்சி தருகின்றது.

வறிய மாணவர்களையும் வறிய மக்களையும் இனங்கண்டு அவர்களின் நலனில் அக்கறை கொண்டு பல உதவிகளைச் செய்து வருகின்றது. அத்துடன் கல்வியை முடித்திருக்கும் இளைஞர்கள், யுவதிகளுக்கு கனேடிய உலகப் பல்கலைக்கழக நிறுவனத்தின் உதவியுடன் பல தரப்பட்ட தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதோடு சுயதொழில் முயற்சிக்கு ஊக்கமளித்து வருகின்றது.

2000ம் ஆண்டு தென்மராட்சி பிரதேசத்தில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக அறவழி செயலகமும் சேதமுற்றது. கனேடிய நிறுவனத்தின் நிதி உதவியுடன் அறவழி தொழில் பயிலகம் கட்டப்பட்டு வருகிறது.

இப்போது கனேடிய நிறுவனத்தின் நிதி உதவியுடன் அறவழி செயலகம் புதிய கட்டடம் திறந்து வைக்கப்படுவதையிட்டும், வெளியிடப்படும் நினைவு மஞ்சரி சிறப்பாக அமைய எமது மன்றம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வீ. மகாலிங்கம்**

*தலைவர்*

*சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.*



"மகிழ்ச்சியை நினை,

மகிழ்ச்சியை பேசு,

மகிழ்ச்சியை பயிற்சி செய்,

மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்,

மனதை

மகிழ்ச்சியால் நிரப்பு

வாழ்க்கையில் இன்றும்

வாழ்நாளில் எல்லா நாட்களும்

உன் நேரம்

உனக்காகத்தான் இருக்கும்"







# மக்கள் சேவையில் மகோன்னத சாதனை!

அகிம்சை வழி வாழ்ந்த பல பெரியார்கள் அடிக்கல் இட்டு ஆரம்பித்த அறவழிப் போராட்டக்குழு பல இடர்களின் மத்தியிலும் மாபெரும் விருட்சமாக வளர்ந்து தென்மராட்சி மக்களுக்கு நிழல் தருகிறது. மூன்றாவது தசாப்த காலத்தை பூர்த்தி செய்யவிருக்கும் இவ் விருட்சமானது தனது கிளையைப் பரப்பி வடமராட்சி மக்களுக்கும் நிழல் கொடுக்கின்றது. அறப்பணியாகிய திருப்பணியை நன்கு திட்டமிட்டு செயற்படுத்தி வருவதில் அறவழிப் போராட்டக்குழு தனக்கென ஒரு தனி இடத்தை பிடித்துள்ளது. அறவழிக் கோட்பாட்டினை பின்பற்றுவதோடு, மக்களுக்கு உன்னத சேவையை செய்யும் நோக்குடன் காலத்திற்குக் காலம் பல நிறுவனங்களை பங்காளர்களாக ஆக்கி அவர்களின் அனுசரணையுடன் மக்கள் சேவையில் மகோன்னத சாதனை படைத்து வருகின்றது. அந்த வகையில் சமகாலத்தில் கைகோர்த்து நிற்கும் நிறுவனம் கனேடிய உலக பல்கலைக்கழக சேவை ஆகும். இந்நிறுவனத்தின் அனுசரணையுடன் 55 இக் காலகட்டத்தில் அத்தியாவசியமானதும், எமது இளைஞர், யுவதிகளின் வாழ்வாதார வழியாக விளங்குவதுமான தொழிற் பயிற்சி நெறியினை பல மில்லியன் ரூபா செலவில் செயற்படுத்தி வருவது எல்லோராலும் நன்றியுடன் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

ஆன்மீக கருத்தில் கூறும்போது ஜீவாத்மா என்றும் நிரந்தரமானது. அது கொண்டிருக்கும் உடல் மாறுதல் அடைகிறது. இதற்கு உவமையாக அறவழிப்போராட்டக் குழுவின் ஜீவாத்மாவாக விளங்கும் திரு.எம்.கே. ஜீவகதாஸ் அவர்கள் அன்று தொடக்கம் இன்றுவரை காலத்தின் தேவை அறிந்து அறவழிப்போராட்டக் குழுவின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக விளங்கி சிறப்புற செயற்பட்டு வருவது பாராட்டத்தக்கது. அறவழிப் போராட்டக் குழுவும் அதன் பணிகளும் மேன்மேலும் வளர வேண்டும், என எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுவதோடு இவர்கள் வெளியிடும் நினைவு மஞ்சரி சிறப்புற அமைய எமது நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துகின்றேன்.

*செ.கமலநாதன்*

*பணிப்பாளர்*

*தியாகி அறக்கொடை நிறுவனம்*

*யாழ்ப்பாணம்.*



"எல்லோரும் வளமுடன்
வாழவேண்டுமென்று
எண்ணுவது –
எல்லோருடனும் உற்சாகமாய்
பழகுவது –
எல்லோரிடமும்
இருக்கும்
நல்லதைப்
பொறுமையுடன்
தெரிந்து கொள்ள
முயல்வது –
இப்படிப்பட்ட சுயநலமற்ற
எண்ணங்கள் தான்
சொர்க்கத்தின்
நுழைவாயில்கள் "



## அறவழிப் போராட்டக் குழு நிறுவனத்தை வாழ்த்தி இலங்கை "தொழிற் பயிற்சி அதிகாரசபையின் யாழ்மாவட்ட அலுவலகம்" வழங்கும்

# வாழ்த்துப்பா!

இராகம் :- கல்யாணி

தாளம் :- ஆதி

*பல்லவி*

*வாழிய! வாழிய! வாழியவே!*
*தென்ம ராட்சி அறவழி போராட்டகுழு மிக*
*வாழிய! வாழிய! வாழியவே!* *(வாழிய)*

*அநுபல்லவி*

*அறவழி நின்று செயல்பல கண்டு*
*அவனியில் சரித்திரம் படைத்திடும் நிறுவனம்* *(அறவழி)*
*(வாழிய)*

*சரணம் 1*

*தொழிற்கல்வி அறக்கல்வி விழுமிய கல்வி*
*தாரணி சிறக்க வழங்கிடும் நிறுவனம்* *(தொழிற்)*
*(வாழிய)*

*அழியாப் புகழுடன் அவனியில் மிளிரும்*
*எங்களின் கோயில் என்றென்றும் வாழி!* *(அழியா)*
*(வாழிய)*

*சரணம் 2*

*சமூகப் பணிகளை சிறப்புடன் ஆற்றிடும்*
*சிந்தனைச் சுரங்கம் செகத்தினில் வாழி!* *(சமூக)*
*சுமூக வாழ்வினில் சுயம்பாய் எழுந்த*
*சுந்தர நிறுவனம் சீருடன் வாழி!* *(சுமூக)*
*(வாழிய)*

*வாழிய! வாழிய! வாழியவே!*
*எங்கள் அறவழி வாழியவே!*
*பாரில் புகழ்பல பெற்று*
*பல் சேவை நிறுவனம் வாழியவே!*
*பல் சேவை நிறுவனம் வாழியவே!*
*பல் சேவை நிறுவனம் வாழியவே!*



“செயலுக்கெல்லாம் ஆரம்ப இடம்

நாற்று – எண்ணம்தான்.

வாழ்வுக்கும் அதன்

மலர்ச்சிக்கும்

எண்ணம் தான் துவக்கம்

நாற்றை சுத்தமாக

வைத்துக் கொள்ளுங்கள்

எல்லாம்

சுத்தமாக இருக்கும்”





# பொருளியல்

MOVMENT FOR A NEW SOCIETY

# NVDAG

## Results Based Management of Jaffna Vocational Training Project By NVDAG with in 30 months

| No | Key Result areas | Situation or Baseline data in January 2006 | Result or change ( impact) - Achievement up to June 2008 |
|---|---|---|---|
| 01 | Registration with Tertiary and Vocational Education Commission (TVEC) | Nil | Registered with Tertiary and Vocational Education Commission (TVEC) |
| 02 | Mobilized communities for Vocational Training education | Nil | 39 GS divisions were mobilized for vocational education in order to learn vocational skills/knowledge for alternative income |
| 03 | Permanent Vocational Training Centre as per TVEC requirement | Nil | Constructed 02 permanent VT buildings |
| 04 | Competency Based Vocational training (CBT) Syllabus/Curriculum | Nil | Introduced competency based VT Syllabus for 07 trades (based on National Vocational Qualification System - NVQ) |
| 05 | Learning Resource Utilization Centre ( LRUC) | Nil | Established LRUCs as per TVEC requirement |
| 06 | Tools and equipments to conduct non - traditional VT courses. | Nil | 08 sets of tools and equipment are available for 08 VT Trade. |
| 07 | VT - Skilled workers | Nil | 250 skilled workers available in 24 VT trades - 40% of these (100) are female trainees |
| 08 | Quality instructors | Nil | 16 quality instructors are attached with NVDAG. |
| 09 | Promoted female technical skilled workers | Nil | 100 trainees are women, (40%) who gained the skills/knowledge and demonstrated these skills to communities |
| 10 | Promoted resource persons within organization | Nil | NVDAG has Trained resource persons within organization in order to deliver the quality PRET VT cycle |

| | | | |
|---|---|---|---|
| 11 | Alternative income activities identified and community ( fishing) perceptions changed about technical skills and vocational training | Nil | Communities' perceptions and attitudes about technical training have changed with many now seeing it as a positive alternative income from traditional employment.<br>Example: Youth completing school have learned technical electrical wiring skills as an alternative income for their families. These youth have demonstrated their skills under tsunami housing scheme in Point Pedro. |
| 12 | Capacity building in quality monitoring and reporting | Some | Adequate resources to deliver, monitor and report on quality VT projects |
| 13 | VT Reforms | Nil | As per Ministry of Vocational and Technical Training education policy, the basic VT reform system has been established. |
| 14 | NAITA Grade III Trade Test | Nil | 11 ex-trainees applied for NAITA Grade III Trade Test and 11 ex- trainees have passed this exam (04 females) receiving nationally recognized certificates. |
| 15 | Long-term strategic plans | Nil | Developed long term draft Strategic Plan. |
| 16 | Employment result | Nil | Done tracer studies for 24 ex - trainees and found that 12 ex - trainees (50%) found employment |
| 17 | Finance audit for VT projects | Nil | Completed the financial audit up to 2007. |

| Pending Result | | | |
|---|---|---|---|
| 02 | Partner financial sustainability | Nil | Developed a concept to open a factory |

The VT project is supported by

WUSC SRI LANKA
Education Changes the World

තෘතියික හා වෘත්තීය අධ්‍යාපන කොමිෂන් සභාව
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு
**TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION**
නිපුණතා පියස, 354/2, ඇල්විටිගල මාවත, කොළඹ 05
நிபுணத்துவ பியச, 354/2, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05
Nipunatha Piyasa, 354/2, Elvitigala Mawatha, Colombo 05, Sri Lanka

දිනය / திகதி / Date: 29-Jul-2008    මගේ අංකය / எனது இல / My No.: TVEC 5/2    ඔබේ අංකය / உமது இல / Your No.: A2418

Secretary
Nonviolent Direct Action Group
Nunavil West
Chavakachcheri

**Provisional Registration of Training Institutes**

We are pleased to inform you that in accordance with the provisions of the Tertiary and Vocational Education Act No. 20 of 1990 and the Development Plan published in the extraordinary gazette notification No. 887/8 dated 7th September 1995, the Tertiary and Vocational Education Commission has approved the registration of your training institute on provisional basis, and it is valid from 16/Jul/2008 to 15/Jul/2010.

| | |
|---|---|
| Name of the Training Institute | : Nonviolent Direct Action Group |
| Registered No. | : P25/0016 |
| Grade | : C |
| Date of First Provisional Registration | : 16/Jul/2008 |

The provisional registration covers the following course(s);

1. Certificate in Leather and Footwear Maker
2. Certificate in Welding

Total no of Courses 2

T. A. Piyasiri

Dr. T.A. Piyasiri
Director General

Dr. T. A. PIYASIRI
Director General
Tertiary and Vocational Education Commission
Vocational Training Complex
354/2, Elvitigala Mw,
Colombo 05

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Chairman | : 011-5863839 | Director (S & A) | : 011-2555045 | General : | 011-5849291 |
| Director General | : 011-5848141 | Director (P & R) | : 011-2555034 | Fax : | 011-2555007 |
| Deputy Director General | : 011-5849228 | Director (IS) | : 011-5849069 | E-mail | : info@tvec.gov.lk |
| Secretary | : 011-2555029 | Director (NVQ) | : 011-5867712 | Web | : www.tvec.gov.lk |

*"Certified Vocational Competencies through NVQ"*

## Details of WUSC Finance Support to NVDAG CB and VT Up to JUNE 2008

| No | Date | Ch.No. | Items | Amount |
|---|---|---|---|---|
| 2008/2009CB | | | | |
| 1 | 12.05.2008 | 721047 | VTM | 77,625.00 |
| 2 | 12.05.2008 | 721047 | PO staff support | 155,250.00 |
| 3 | 12.05.2008 | 721047 | watcher | 67,500.00 |
| 4 | 06.06.2008 | 716861 | OJT-Travel | 200,000.00 |
| | | | | 500,375.00 |
| 2008/2009 Projects | | | | |
| 1 | 14.04.2008 | TFR | 01-08/08/Alu.Fab-016(2) | 795,786.20 |
| | 19.05.2008 | 721074 | | 255,062.50 |
| | | | | 1,050,848.70 |
| 2 | 14.04.2008 | TFR | 01-09/08/MB Mechanism-007 | 868,936.20 |
| | 19.05.2008 | 721075 | | 255,062.50 |
| | | | | 1,123,998.70 |
| 3 | 14.04.2008 | TFR | 01-10/08/Com.H. W-018(1) | 795,786.20 |
| | 19.05.2008 | 721073 | | 255,062.50 |
| | | | | 1,050,848.70 |
| 4 | 20.05.2008 | 721080 | 01-11/08/Welding-004(2) | 795,896.20 |
| | | | | 4,021,592.30 |
| 2007/2008CB | | | | |
| 1 | 04.05.2007 | 697345 | VTM | 155,250.00 |
| | 14.09.2007 | 714011 | | 155,250.00 |
| | 17.11.2007 | 714062 | | 207,000.00 |
| | 23.01.2008 | 721005 | | 129,375.00 |
| | | | | 646,875.00 |
| | 04.05.2007 | 697345 | FO | 103,500.00 |
| | 14.09.2007 | 714011 | | 103,500.00 |
| | | | | 207,000.00 |
| | 04.05.2007 | 697345 | Infrastructure | 150,000.00 |
| | 18.11.2007 | 714067 | | 100,000.00 |
| | | | | 250,000.00 |
| | 14.09.2007 | 714011 | Watcher | 52,500.00 |
| | 23.01.2008 | 714086 | | 52,500.00 |
| | | | | 105,000.00 |
| | 03.12.2007 | 714080 | VT building Renovation | 825,125.00 |
| | 25.01.2008 | 721008 | | 250,500.00 |
| | 25.01.2008 | 721009 | | 340,000.00 |
| | 19.06.2008 | 721092 | | 225,000.00 |
| | | | | 1,640,625.00 |
| | 10.01.2008 | TFR | VT Building-New | 2,685,000.00 |
| | 29.02.2008 | TFR | | 993,413.45 |
| | 13.05.2008 | 721048 | | 504,086.55 |
| | 20.05.2008 | 721081 | | 3,346,000.00 |
| | | | | 7,528,500.00 |
| | 16.11.2007 | 714052 | Latrine | 70,000.00 |
| | 29.01.2008 | 716813 | follow up officer | 23,000.00 |
| | 23.01.2008 | 721005 | Chair Repair | 16,000.00 |
| | 23.01.2008 | 714094 | Rent | 6,000.00 |
| | 29.01.2008 | 721013 | Motorcycle | 259,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 10.03.2008 | TFR | IWD-2008 | 100,000.00 |
| 2 | 23.01.2008 | 714013 | LURC | 300,000.00 |
| | | | | **11,152,000.00** |
| **2007/2008 Projects** | | | | |
| 1 | 09.03.2007 | TFR | 01-02/07/Alu.Fab-016(1) | 707,346.20 |
| | 01.04.2007 | 697327 | | 336,187.50 |
| | 30.07.2007 | 697383 | | 272,048.70 |
| | | | | 1,315,582.40 |
| 2 | 09.03.2007 | TFR | 01-03/07/Plumbing-013(1) | 657,846.20 |
| | 23.01.2007 | 697328 | | 369,187.50 |
| | 30.07.2007 | 697382 | | 237,398.70 |
| | | | | 1,264,432.40 |
| 3 | 01.04.2007 | 697335 | 01-04/07/Elect.wiring-006(2) | 346,408.70 |
| | 01.04.2007 | 697329 | | 452,375.00 |
| | 01.08.2008 | 697384 | | 246,748.70 |
| | | | | 1,045,532.40 |
| 4 | 01.08.2007 | 697385 | 01-05/07/Welding-004(1) | 707,346.20 |
| | 19.10.2007 | 714044 | | 94,160.00 |
| | 23.01.2008 | 714085 | | 498,236.20 |
| | | | | 1,299,742.40 |
| 5 | 01.08.2007 | 697386 | 01-06/07Leather-021(1) | 707,346.20 |
| | 23.01.2008 | 714084 | | 498,236.20 |
| | | | | 1,205,582.40 |
| 6 | 01.02.2008 | 721022 | 01-07/07/TV/Radio-015(1) | 1,301,282.40 |
| | | | | **7,432,154.40** |
| **2006/2007 Project** | | | | |
| | 20.10.2005 | 385851 | 01-01/06/Elect.Wiring-1 | 387,255.00 |
| | 13.03.2006 | 385868 | | 288,255.00 |
| | 06.06.2006 | 385906 | | 22,000.00 |
| | 09.06.2006 | 385889 | | 6,600.00 |
| | | | | 704,110.00 |
| **2006/2007 CB** | | | | |
| | 24.10.2005 | 385853 | VTM | 41,400.00 |
| | 13.03.2006 | 385870 | | 41,400.00 |
| | 11.01.2007 | TFR | | 41,400.00 |
| | | | | 124,200.00 |
| | 24.10.2005 | 385853 | FO | 48,300.00 |
| | 11.01.2007 | TFR | | 40,250.00 |
| | | | | 88,550.00 |
| | 24.10.2005 | 385853 | | 15,000.00 |
| | 06.06.2006 | 385904 | Furniture & Equipment | 270,000.00 |
| | | | | **1,201,860.00** |
| **TOTAL** | | | | **24,307,981.70** |

# Learning And Resource Utilization Center (LRUC)

# கற்றல் வளப் பயன்பாட்டு மையம்

## Objectives:

- ❖ Having all the documents related Vocational Training and its system in Sri Lanka and in some foreign countries.
- ❖ Having internet and e-mail facilities to access the national and international system and Technology changes.
- ❖ Key area to keep all type of CBT curriculum and national skill standards for Vocational Training.
- ❖ Functioning as a mini library to keep necessary types of Vocational Training guide or Vocational Training advance skill and employment related books to be accessible by Instructors and ex-trainees.
- ❖ Producing the training details in the district for necessary departments and for Beneficiaries whenever request. Co-ordination with vocational Commission for updates.
- ❖ Resources accessible for partners, instructors, Trainees and ex-trainees.



## Expected Outcome:

- ❖ Every partner organization accessible to utilize the resources with the Established rules and regulation of the organization.
  (Internet, Computer facilities, Multi media Projectors, syllabus and guide books)
- ❖ Co-ordination will remain with Vocational Commissions.
  (TVEC, VTA. & NAITA)
- ❖ Ex-trainees and Instructors will get benefits to improve theier capacity on Vocational Training technology, business field and Computer knowledge.

# ஆக்கவியல்

MOVMENT FOR A NEW SOCIETY

அன்பு அகிம்சை எளிமை

# IMPORTANCE OF TEAM BUILDING IN ORGANISATIONS



**DR.K.Kuhathasan**
**CEO Cenlead**

In organisations, the way in which people behave towards each other and the way in which groups of people relate to and work with each other is very important. The understanding and application of team work principales enhance the productivity of an organisation.

It includes frustration, grumbling relationships between superior and subordinates. It is observed that many times tasks are not performed at all, because there is no clarity about the role to be played by different people. Team leader feels isolated.

### Characteristics of effective team work

1. People can express themselves honestly and openly.
2. Mistakes are faced openly.
3. Healthy competition and conflict of ideas are used constructively. Team members have a pride in the success of their team. Unhelpful competition and conflict can be avoided.
4. Good relationship exists with other teams and departments.
5. Personal relationships are characterised by support and trust.
6. Meetings are productive and participative.
7. LeaderMember Relationships are sound. Each helping the other to perform his role better.
8. Clear argeement and understanding of objectives and of the roles which team and its individual members will play in achieving them.
9. The team regularly reviews where it is going. Why it needs to go there, how it is getting there. If necessary, it alters its practices in the light of that review.

### Various facets of team building

**1. Clear objectives and clear goals**

All the member of the group should be aware of the objectives. The first step to is identify what is to be achieved.

It is essential perequisite of the effective team. The efforts should be made to narrow down the gap between team objectives and personal objectives.

**2. Openness**

Members should not have mental perceptual blocks. The team members

should be able to state their views, their differences of opinion, their problems without fear of ridicule or retaliation. Where members become less willing to express themselves openly, energy, effort and creativity are lost.

**3. Sound Inter-group relations.**

In any organisations, there are different groups. All are performing tasks in their respective areas. Team members invariably observe their leader's style and evaluate his ability to promote openness, co-operation and participation. Leadership is perhaps the most important factor in determining the quality of team work. Successful team leader's characteristics are:

1. He is true to personal beliefs.
2. He uses delegation as an aid to achievement and development.
3. He owes responsibility and befends the actions of the members.
4. He is clear about the standards.
5. He is willing and able to give and receive trust and loyalty.
6. He possesses personal strength to maintain integrity and position of his team.
7. He is receptive to hopes and needs of others.
8. He faces facts honestly.
9. He encourages personal and team development.
10. He establishes and maintains effective working practices.
11. He tries to make a happy and rewarding working place.

**Working together**

All successful teams demonstrate the same fundamental features; strong and effective leadership; the establishment of precise objectives; making informed decisions; the ability to act quickly upon these decisions communicating freely; mastering the requisite skills and techniques to fulfil the project in hand: providing clear targets for the team to work towards; and above all - finding the right balance of people prepared to work together for the common good of of the team.

A team is more than a group. Effective teams consist of people who can:

1. Work together
2. Are loyal to each other.
3. Feel committed and are motivated to achieve a high level of output.
4. Care how other members of the team feel.
5. Are open with each others and listen to each other.
6. Have common goals.
7. Are prepared to work conflict through.

Collaboration i.e. working together is the keynote of team activity. Effective team have clear objectives and agreed goals; they are open and do not avoid confrontation; the members support and trust one other.

The members work together in an atmosphere of cooperation; conflicts are open and resolved by the team; there are sound procedures in place and good leadership. The team regularly reviews its own performance and individuals are encouraged to develop with in the team.

**Analysing team tasks**

Successful team can be formed by 2 to

25 or more people, but more important than size is shape - the pattern of working into which team members settle to perfrom their given tasks.

**Advantages of teams**

1. Have a common goal that rallies their resources, energy, talents, and skills. They believe in what they're trying to do.
2. Set their own objectives, instead of having them dictated by some body out side the group.
3. Agree on quality, quantity, cost, and time standards. Each members has both oars in the water and is pulling in the same direction.
4. Develop guidelines for beharviour and performance that are enforced through peer pressure.

**Teams, also help organisations to;**

1. Encourage and foster participation from every one. Employees have more opportunities to make meaningful contributions.
2. Advance ideas of total quality management and continuous process improvement across all boundaries.
3. Respond faster to market conditions, problems, opportunities and customers demands and expectations.
4. Make more decisions by consensus which gives them widespread acceptance support, and credibility.

**Some Basic teamwork skills**

Teams are always organised around some process. For example, a team may be responsible for part of a manufacturing process or for the development of new products. To do their work team members need a variety of skills. There are four categories of skills that are common to all teams.

1. Functional / technical skills. For any team to perform well, its members must have expertise in the skills required to perform the tasks well.

2. Interpersonal skills. The ability to get along with people in general and other members of the team in particulars is clearly a vital skills to facilitate team work. Even one member of team who dosen't get along well with others can disrupt and distract the energies of a whole team. Training in team work often includes information and exercises aimed at helping improve their interpersonal skills.



3. Problem-solving skills. Processes never operate without problems and without opportunities to make improvements. There are several tools and techniques team members can use to better understand processes, identify the causes of problem, and make improvements. This is another area in the curriculum of teamwork training.

4. Decision-making skills. Team members need to attain consensus around a course of action. This means they have to know how to work together to identify options and come to shared agreement on which options make the most sense.

# எண்ணம் போல் இருப்பாய்......

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு வடிவில் அமைதியும் ஒன்று. மனமானது ஒரு குரங்கு. அதனை ஒரு நிலைப்படுத்துவதற்கு ஊடகமாக அமைவன இறைதியானம், விரதம், பாடல், சைவக்கிரியை நெறிகள் என்பனவாம்.

செல்வத்துள் செல்வம் எது? என்ற வினா காலந்தோறும் எழுப்பப்பட்டு வந்த வினாவேதான். காலம், நேரம், சந்தர்ப்பம்,சூழ்நிலை என்பவற்றிற்கேற்ப பல்வேறு விடைகளும் அளிக்கப்பட்டு வந்தன. பணம் என்றும் பண்டம் என்றும் பலவாறு கூறப்பட்டன. ஆனால் இன்று மனச்சாந்தியே செல்வத்துள் செல்வமாக இருப்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். மனச்சாந்திக்குத்தான் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. யாரைக் கேட்டாலும் சாந்தி இல்லை, அமைதி இல்லை, நிம்மதி இல்லை என்று தான் கூறுகின்றனர். புறச்சாந்தியிலும் அகச்சாந்தியே முக்கியம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது போல அகத்தில் சாந்தி இருந்தால் தான் புறத்திலும் இருக்கும்

நம் முன்னோர்கள் சமயம் என்ற ஒன்றை ஏற்படுத்தியமை வீணுக்கன்று. சமயத்தின் மூலம் ஒவ்வொருவர் மனத்திலும்சாந்தி, சமாதானம், நிம்மதி என்பவற்றை நிலைநிறுத்த முடியும் என நம்பினர். சமய நெறிகளை ஒழுங்காக அனுட்டிப்பதன்மூலம் மண்ணில் பெரும்பாலும் சமயநெறிகள் வாழ்வில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அதனால் மனிதவாழ்வில் நிம்மதியும்பறிபோகிறது.

மன அடக்கும், புலனடக்கம் என்பவற்றின் மூலம் பெறப்படும் சாந்தி நித்தியமானது. தியானம், சமயவாழ்வு என்பன மனஅடக்கத்தையும், புலனடக்கத்தையும் ஏற்படுத்த உதவுகின்றன. மனத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதனால் மனத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதனால் மனத்தைச் சாந்தப்படுத்த முடியும். மனத்தில் தோன்றுகின்ற உணர்ச்சிகளில் பெரும்பாலானவை தீய உணர்ச்சிகளே. அதனால் நிம்மதி குலைகிறது. சமய நெறியில் வாழ்வதன் மூலம் தீய உணர்ச்சிகள் தோன்றாமல் தடுக்க முடியும். அதே வேளை உணர்ச்சிகளை அறிவினால் அடக்க இயலும். பகுத்தறிவு என்ற பெயரில் எப்படி எப்படியெல்லாம் நடந்து கொள்கிறோம். ஆனால் அந்த பகுத்தறிவு தீய உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதாக இல்லை. தூய நல்லறிவினாலேயே மனத்தில் தோன்றும் எல்லையற்ற தீய உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும். உணர்ச்சிகளைத் தூய அறிவினால் வெல்பவர்களே உத்தமர்கள் ஆவர்.

மனச்சாந்தி குலைவதற்குப் பல காரணிகள் உள்ளன. அழுக்காறு, அவா, வெகுளி, வெறுப்பு, இன்னாச்சொல் என்பவற்றால் நாம் ஆளப்படும்போது, எமது சாந்தி பழுதுபட்டுவிடுகிறது. எமது நிம்மதிக் குலைவுக்கு முதலில் நாமே காரணம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

பிறர்மீது பொறாமை கொள்ளக்கூடாது. பிறர்பொருளில் இச்சை கொள்ளல் ஆகாது. பிறர்மீது கோபங்கொள்ளக் கூடாது. பிறருடன் பகைத்தல் ஆகாது. பிறருடன் கடுஞ்சொல் பேசக்கூடாது. இவ்வாறு நடந்து கொள்ளப் பழகிக் கொள்வோமானால் நாம் நிம்மதியாக வாழலாம். கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுத கதை போல நிம்மதியைப் பெறுவதற்குரிய வழிமுறைகளை எம்மிடம் வைத்துக்கொண்டு வெளியில் அதனைத்தேடி அலைகின்றோம்.

நிம்மதியை பாதிக்கும் ஒரு விஷயத்தை எடுத்துக்கொள்வோம். அதாவது கோபம் ஒரு போதை. அதற்கு அடிமையாகிவிட்டால் எமது பகுத்தறிவு பறிபோய்விடும். என்ன பேசுவது, என்ன செய்வது என்று எதுவுமே தெரியாமல் இருக்கும். அதனால் எத்தனையோ கெடுதிகள் தீமைகள் ஏற்படுகின்றன. காலையில் கோபத்துடன் உறவாடி வாழ்க்கையை ஆரம்பித்துப்பகல் முழுவதும் கோபத்துடன் உறவாடி வாழ்க்கையை நடாத்தி இரவில் கோபத்துடனேயே படுக்கைக்குப் போய்த் தூக்கத்தையும் கெடுத்துக் கொள்ளும் பலரை நாம் காண்கின்றோம். அவர்கள் தூக்கத்தை மட்டுமா கெடுத்துக்கொள்கிறார்கள். இப்போது கோபத்தை எவ்வாறு தவிர்ப்பது அல்லது தணிப்பது என்னும் வினா எழுகிறது. பெரியவர்கள் அதற்கும் வழிகூறியிருக்கிறார்கள்.

முதலில் கோபம் வருகின்றது என்று தெரிந்ததும் ஒரு தம்ளர் தண்ணீர் அருந்த வேண்டும். அதன் பின் முடியுமானால் முகம் பார்க்கும் கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பார்க்கவேண்டும். அமைதியாகப் படுத்துக்கொள்ளலாம். அல்லது கோபம் ஏற்பட்ட இடத்திலிருந்து விலகி வேறிடத்திற்கு நடந்து செல்லலாம். கடவுளின் நாமங்களைச் செபிப்பதோடு,தோத்திரங்களையும் மனமுருகிப்பாட வேண்டும். நல்ல சிந்தனைகளை மனத்தில் வரவழைக்கவேண்டும். ஏதாவது நற்கருமங்கள் சேவைகள் என்பவற்றில் ஈடுபட்டுப் பொறிபுலன்கள் நன்மையில் நாட்டமுறச் செய்தல் அவசியம். "மௌனம் கலகநாஸ்தி " என்பர். மௌனமாக இருத்தல் மிகநன்று. ஒரு கைதட்டி ஓசை எழாது. கடவுளிடம் சகலதையும் ஒப்படைத்துவிட்டுக் கடவுள் சிந்தனையோடு சும்மா இருந்தாலே மிக உயர்ந்த சாதனை என்கிறது சைவநீதி.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் நல்லறிவு பெற்றவனாக வாழ வேண்டும். ஒழுக்கம், கட்டுப்பாடு அமைதியான சூழ்நிலையில் உருவாக்கிக் கொள்ள வேண்டும். சிறுவயதில் கிரிசாம்பாள் கதை ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது.வறுமையின் சூழலில் ஒரு பிரபு சிறியவர்களுக்காகச் செய்து வைக்கப்பட்ட மோதகங்களை எல்லோரும் சண்டையிட்டு எடுத்தார்கள். இவள் அமைதியாகப் பிரபுவிற்கு நன்றிகூறி சிறிய மோதகங்களைப்பெற்று இறுதியிலே பொற்காசையே பெற்றாள். இன்னும் ஔவைப்பாட்டி பூசையை அவதியுடன் செய்யவே பிள்ளையார் ஆறுதலாகச் செய்யும்படி கூறினார்.பின் தனது தும்பிக்கையால் முதல் கைலாயத்தில் சேர்த்து விட்டார். எனவே அமைதியாகச் செல்வதால் நன்மைபெறுகிறோம். தவறுகளை விலக்கக் காரணமாகிறோம். எந்தவொரு விஷயமும் அமைதியில் தான் வெற்றி காண்கிறது. தருமன் பொறுமையாக இருந்து தன் பெயரை நிலை நாட்டினான். சிறுவர்களுக்கு ஆமை முயல் ஓட்டப்போட்டியே எடுத்துக்காட்டாக அமைகிறது. எமது தமிழ்மொழி நூல்கள் ஆசிரியர்கள் ஆன்றோர்கள் ஆழ்ந்து கற்று அமைவுற ஆசானிடம் கேட்ட அறிவுகளை எல்லாம் நூல்வடிவில் தந்துள்ளார்கள். இவைகளின் அமைதி எத்திறம் சிறந்த பண்பாகக் காணப்படுவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

இவ்வாறாகப் பல அறிவு நூல்களில் "அமைதி " என்னும் விடயம் கூறப்படுவதை மனிதனின் ஒழுக்கத்தில் ஒன்றாக அமைவதை நூல்கள் மூலம் அறிவோம். திருக்குறளில்கூட ஓர் அதிகாரம் அமைவதை மேலதிக "அமைதி" விடயத்தைப் பெற்றுக்கொண்டு வாழ்வோமாக.

இன்று உன்னைக் குறை சொல்பவர்கள் நாளை புகழ்ந்து பேசுவார்கள். இறைவனின் தொண்டன் ஒருபோதும் கவலையில் ஆழ்வதில்லை.

# வாழ்க்கைப் புத்தகம்

நீங்கள் தான் வாழ்க்கைப் புத்தகங்களை விளக்கும் புத்தகமாக இருந்து வருகிறீர்கள். அதை எந்த நூல் வெளியீட்டாளரும், அச்சடித்து புத்தகமாக வெளியிடுவதில்லை. அந்தப் புத்தகம் எந்தக் கடையிலும் விற்பனைக்கு கிடைப்பதில்லை.

நீங்கள் உலகத்தையும் உங்களையும் புரிந்து கொள்ள உங்களுக்குள் இருக்கும் வாழ்க்கைப் புத்தகத்தைப் படித்தால் மட்டும் போதுமானது. இதைவிட சிறந்த கல்வி வேறெங்கும் கிடைக்கப் போவதில்லை. கல்லூரியில் பெரிய பட்டப் படிப்புபடிப்பதைவிட உங்களுடைய வாழ்க்கைப்புத்தகத்தை கவனத்துடன் ஆழ்ந்து படிக்கும் போது உங்களை நீங்கள் வெகுவாக உயர்த்திக் கொள்ள முடியும். உலகத்திலும் நல்ல மாற்றங்களைக் கொண்டுவர முடியும்.

நீங்கள் உங்கள் முகத்தை அடிக்கடி கண்ணாடியில் பார்த்துக் கொள்கின்றீர்கள். முகத்திற்கு பவுடர் பூசி உங்களை அழகுபடுத்திக் கொள்கின்றீர்கள். ஆனால் கண்ணாடியில் தெரியும் உங்கள் வெளித்தோற்றத்தை மட்டும் எடை போட்டு வருகிறீர்கள். வெளித் தோற்றத்தை விட உங்கள் தோற்றம் தான் முக்கியமானதாகவும் சக்தி வாய்ந்ததாகவும் இருந்து வருகிறது.

நீங்கள் எதைப்படிக்க வேண்டும்? எதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்? எனப் பாடசாலைகள், கல்லூரிகளில் சொல்லித்தருகிறார்கள். இவைகளின் அடிப்படையில் செயல்பட்டு வந்தால் நீங்கள் இரண்டாம் தர மனிதராகத்தான் உருவெடுக்க முடியும். உங்களுடைய வாழ்க்கைப் புத்தகத்தை கவனமாகப் படித்து வந்தால் நீங்கள் உங்களை முதல்தர மனிதராக உயர்த்திக் கொள்ள முடியும்.

நீங்கள் உங்களுடைய வாழ்க்கைப் புத்தகத்தை ஆழ்ந்து கவனிக்கும் போது உங்களுடைய உள்ளத்திற்குள் பயங்கள், கவலைகள், இன்பங்கள், துக்கங்கள், ஆசைகள், விருப்பங்கள், பொறாமை, எதிர்பார்ப்பு, குழப்பங்கள், போராட்டங்கள் போன்றவை நிறைந்திருப்பது தெரியவரும்.

நீங்கள் மனித இனம் கடைப்பிடித்து வந்த மரபுகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றின் அடிப்படையில் உங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வருகிறீர்கள். அனைவரும் இதே போன்று தான் வாழ்ந்து வருகிறார்கள்.

நீங்கள் தான் உலகமாக இருந்து வருகிறீர்கள். மனித இனத்தின் கதையே உங்களுக்குள் அடங்கியிருக்கிறது.

நீங்கள் உங்கள் வாழ்க்கைப் புத்தகத்தைப் படிக்கும் போது உலகில் அநியாயங்கள், கலவரங்கள், சண்டைகள், யுத்தங்கள் போன்றவை நிறைந்திருப்பதையும் அவைகள் உருவாவதற்கான காரணங்களையும் நம்மால் சுலபமாகக் கண்டு கொள்ள முடியும்.

நாம் தான் படுமோசமான உலகச் சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். நாம் நம்மை இன்றும் அதிக அளவில் கொடியவர்களாக மாற்றிக்கொண்டு வருகிறோம். நம்முடைய பொறுப்பற்ற செய்கைகளினால், உலகை மேலும் சீரழிந்து அழிவை நோக்கி சரிந்து கொண்டிருக்கிறது என்ற உண்மையை நம்மால் கண்டு கொள்ள முடியும்.

நாம் பார்ப்பது, கேட்பது, புரிந்து கொள்வது ஆகியவற்றை நன்கு பயன்படுத்தி உங்களுடைய வாழ்க்கைப் புத்தகத்தை ஆழ்ந்து ஆராயும் போது நீங்கள் உங்களைப் பற்றியும், நாம் வாழ்ந்து வரும் உலகத்தைப் பற்றியும் நன்றாகவும், முழுமையாகவும் தெரிந்து கொள்ள முடியும்.

நம்முடைய வாழ்க்கைப் புத்தகத்தைப் படிக்கும் போது நமக்குள் முரண்பாடுகள், குழப்பங்கள், ஒழுங்கின்மை போன்றவை இருந்து வருவதை நம்மால் கண்டு கொள்ள முடியும்.

நாம் ஒன்றை விரும்புகின்றோம். நம்மைப் பேராசைக்காரன் என்று கூறிவிடுவார்கள் என்று பயந்து நம் விருப்பத்தை வெளியில் எடுத்துச் சொல்லாமல் அதை நமக்குள் மறைத்து வைத்துக் கொண்டுவிடுகிறோம்.

நாம் அறவழியைப் பற்றி நிறையவே பேசி வருகிறோம். ஆனால், வன்செயல் செய்வதில் மகிழ்ச்சி கண்டு வருகிறோம். அன்பைப் பற்றி அனைத்து நேரமும் பேசி வருகிறோம். ஆனால் நம்மனைவி பிள்ளைகள் உட்பட அனைவரையும் நம்முடைய முன்னேற்றத்திற்காகவும் இன்பத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

நாம் ஒன்றைச் சொல்லி வருகின்றோம். ஆனால், அதற்கு எதிர்மாறானதைச் செய்து வருகிறோம்.

நம்மிடம் நிறைய முரண்பாடுகள் இருப்பதையே நாம் கண்டு கொள்ளாமல் "நான் நல்லவன்" "நான் திறமைசாலி" என்பதைப் போன்ற தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்திக் கொண்டு அகம்பாவத்துடன் நடந்து கொண்டு வருகிறோம்.

நமக்குள்ளும் நமக்கு வெளியிலும் இருந்து வரும் ஒழுங்கின்மையை நாம் முதலில் அகற்ற வேண்டும். நாம் ஒழுங்கைக் கொண்டு வர நமக்குள் இருந்து வரும் முரண்பாடுகளில் இருந்து நம்மை முழுமை முழுமையாக விடுத்துக் கொள்ள வேண்டும்.

நாம் நம்மிடம் இருக்கும் முரண்பாடுகளை ஆழ்ந்து கவனிக்கும் போது அவைகள் பகைகள், சண்டை, போர்கள் போன்றவற்றை உருவாக்கி மனித வாழ்க்கையை அருவருக்கத்தக்கதாகவும், துன்பம் நிறைந்திருப்பதாகவும் மாற்றி விட்டிருப்பது தெரியவரும்.

நாம் கண்டு கொண்ட உண்மை நம்மை முரண்பாடுகளில் இருந்து விடுவிக்கும். முரண்பாடுகளில் இருந்து நம்மை விடுவித்துக் கொள்வது தான் நமது வாழ்க்கைப் புத்தகத்தின் முதல் அத்தியாயமாக இருந்து வருகிறது.

நான் என்ற அகந்தை, ஒழுங்கின்மையை உருவாக்குகிறது என்பதை விளக்குகிறது. "நான்" என்ற நமக்குள் நிறைய உருவாக்குகிறது. "நான்" என்ற மையத்தில் இருந்து நான் எண்ணங்கள் உருவாகின்றன. "என்னுடைய பெயர்....." "என்னுடைய கார்....." "என்னுடைய வீடு வாசல்" "என்னுடைய மனைவி...." "என்னுடைய இன்பம்..." போன்றவை பற்றிய எண்ணங்கள் நமக்குள் நிறைய முரண்பாடுகளை உருவாக்கிவிடுகின்றன.

நமது வாழ்க்கைப் புத்தகத்தின் அடுத்த அத்தியாயம் என்ன மாதிரியான கட்டுப்பாடுகளில் நாம் சிக்கித் தவித்து வருகிறோம் என்பதை விளக்குகிறது.



நம்முடைய மதங்கள் நம்மை வெகுவாகக் கட்டுப்படுத்தி வருகின்றன. அவைகள் நம்மை பூஜைகள், சடங்குகள் போன்றவற்றைச் செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்தி வருகின்றன. கட்டுப்பாடுகள் இருக்கும் இடத்தில் சுதந்திரம் இருக்க முடியாது. இப்படிப்பட்ட நிலையில் நம்மிடம் ஒழுக்கம் இருக்க முடியாது. நல்ல உறவும் இருக்க முடியாது. அப்போது "என்ன இருக்கிறது" என்ற உண்மை நிலையை நம்மால் கண்டு கொள்ள முடியாது.

நீங்கள் கல்லூரிப் புத்தகங்களின் மாணவனாக இருக்காதீர்கள். வாழ்க்கையின் மாணவனாக இருங்கள். அன்பு, அமைதி, மகிழ்ச்சி போன்றவைகள் நிறைந்தவைகளாக உங்களுடைய வாழ்க்கைப் புத்தகம் இருக்கட்டும்.

# சுயஅறிவு

சுயஅறிவு தன்னைப்பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள உதவுகிறது. தன்னைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ளாதவன் மேலெழுந்தவாரியான, செயற்கையான வாழ்க்கையைத் தான் வாழ்ந்து வருகிறான்.

இந்த உலகத்தில் இருந்துவரும் நூல்கள் அனைத்தையும் நன்கு படித்தவனாக ஒருவன் இருக்கக்கூடும் அவன் மிகவும் சாதுரியமாக நடந்து கொள்ளத் தெரிந்தவனாக இருக்கக்கூடும்

தான் படித்த எண்ணற்ற நூல்களிலிருந்து சிறந்த கருத்துக்களை மேற்கோள்களாக எடுத்துக்காட்டி மற்றவர்களைக் கவரும்படி பேசக்கூடிய ஆற்றலையும் அவன் பெற்றிருக்கக்கூடும். ஆனால் இந்த உலகத்தில் இருக்கும் அனைத்தையும் ஒருவன் தெரிந்து கொண்டிருந்த போதிலும், தன்னைப்பற்றி நன்கு தெரிந்து கொள்ளாதவனாகத்தான் இருந்து வருவான். அவன் செய்யும் காரியங்கள் அனைத்தும் பிரச்சனைகளைத் தான் உருவாக்கிவரும்.

தன்னைப்பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ளாதவனாய் உலகத்திற்கும் சமுதாயத்துக்கும் எந்தவொரு நன்மையும் செய்ய முடியாது.



ஒருவன் தன்னைப்பற்றி அனைத்தையும் நன்கு தெரிந்து கொள்ளும் போதுதான் விவேகம் பிறக்கிறது.

மதங்களின் தலைவர்கள், நாட்டின் தலைவர்கள், கட்சிகளின் தலைவர்கள், உளவியல் நிபுணர்கள், அறிஞர்கள் போன்றவர்கள் எழுதிய நூல்களை ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் படித்து வந்த போதிலும் அவனால் தன்னைப்பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள முடியாது.

அவனுடைய மனம் மற்றவர்களின் கட்டுப்பாட்டிற்குள் தான் இருந்துவரும். அப்படிப்பட்டவன் நாடு, சமயம், கடவுள், மரபுகள் போன்றவற்றின் அடிமையாகத்தான் செயல்பட்டு வருகின்றன.

தன் மனதில் ஓடும் எண்ண ஓட்டங்களை ஆழ்ந்து கவனித்து அவைகள் ஒவ்வொன்றையும் முழுமையாக விசாரணை செய்யும் போதுதான் ஒருவன் தன்னைப்பற்றி நன்கு புரிந்து கொள்ள முடியும்.

ஒவ்வொருவரும் தன்னைப்பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ள கல்வி உதவ வேண்டும். தன்னிடமிருக்கும் கெட்ட குணங்கள் அனைத்திலிருந்தும் தன்னை முழுமையாக விடுவித்து தன்னை நல்லவனாக மாற்றிக் கொள்ள கல்வி உதவ வேண்டும்.

# ஒப்பிட்டுப் பார்ப்பது

நாம் அனைத்து நேரமும் நம்மை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து வரும் கெட்ட குணத்தை வளர்த்து கொண்டிருக்கிறோம். நாம் நம்மை விட நல்ல நிலையில் இருப்பவர்களை ஒப்பிட்டுப் பார்த்து பொறமைப்பட்டு வருகிறோம். நாம் இப்போது இருந்து வரும் நிலையோடு நாம் எதிர்காலத்தில் என்னவாக உருவெடுக்க வேண்டுமென்ற நிலையை ஒப்பிட்டு பார்த்து நம்மை அந்த அளவுக்கு உயர்த்திக் கொள்ள முடியுமா? என்று பயப்பட்டு வருகிறோம்.

குழந்தைப் பருவத்தில் இருந்தே இந்தக் கெட்ட பழக்கம் நம் மீது திணிக்கப்பட்டு வருகிறது. இன்று பாடசாலைகளில் பல்கலைக்கழகங்களில் சொல்லிக் கொடுக்கும் கல்வி ஒப்பிட்டுப் பார்ப்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

நாம் நம்முடைய அறிவு, திறமை, சொத்து, அழகு, பதவி, வசதிகள் போன்றவற்றை நமக்குத் தெரிந்த அனைவருடன்ஒப்பிட்டுப் பார்க்கும் கெட்ட பழக்கத்தைக் கொண்டிருக்கிறோம். அவன் வீடு, கார் போன்ற அனைத்து வசதிகளுடனும் மிகவும் ஆடம்பரமாக வாழ்ந்து வருகிறான். அவனை விட நான் ஒரு பெரிய பணக்காரனாக என்னை உயர்த்திக் கொள்ள வேண்டும். அவன் பெரிய உத்தியோகத்தில் இருந்து வருகிறான். அவனைவிட நான் உயர்ந்த பதவியை அடைய வேண்டும் என்று நாம் அனைத்து நேரமும் நம்மை விட உயர்ந்த நிலையில் இருப்பவர்களோடு ஒப்பிட்டு பார்த்து நிறைய மனவேதனையைக் கண்டு வருகிறோம்.



நாம் சந்திப்பவர்கள் நம்மைவிட ஏதாவது ஒன்றில் சிறந்தவர்களாக இருந்துவருவார்கள். ஒருவனுக்கு அவனுடைய மூதாதையர் விட்டுச் சென்ற நிறையச் சொத்து கிடைத்திருக்கக்கூடும். ஒருவன் உடல் உபாதை எதுவும் இல்லாமல் ஆரோக்கியம் மிகுந்தவனாக இருந்து வருவான்.

ஒருவனுக்கு அழகான மனைவி கிடைத்திருக்கக்கூடும். ஒருவனுடைய மனைவி வீட்டை நன்கு நிர்வகித்து வரும் திறமையைக் கொண்டவளாக இருந்து வருவாள். அனைவரும் மெச்சும்படி நன்கு பாடும் குரல்வளம் ஒருவனுக்கு கிடைத்திருக்கக்கூடும். ஒருவன் எதற்கும் கவலைப்படாமல் அனைத்து நேரமும் சிரித்து வாழ்க்கையை நன்கு அனுபவித்து வரும் குணத்தைக் கொண்டவனாக இருந்து வருவான். இத்தகைய ஒப்பிட்டுப் பார்க்கும் குணம் தாழ்வு மனப்பான்மை என்ற நோயை உருவாக்கி தாங்கமுடியாத துயரத்தைத்தந்து நம்மைத் திக்குமுக்காடச் செய்து விடுகிறது.

நம்முடைய கல்விமுறை தவறானதாக இருந்துவருகிறது. பரீட்சைகளில் எடுக்கும் மதிப்பெண்களை மட்டும் கருத்தில் கொண்டு நாம் மாணவர்களை எடைபோட்டு வருகிறோம். இது பயங்கரமான போட்டி மனப்பான்மையை மாணவர்களிடையே உருவாக்கிவிடுகிறது.

இந்தத் தவறான வழிமுறை நன்கு அனுபவித்து வாழ்ந்து வரவேண்டிய மாணவப் பருவத்தையே வேதனை நிறைந்ததாக மாற்றி விடுகிறது. பெற்றோர்கள் மற்ற மாணவர்கள் எடுக்கும் மதிப்பெண்களோடு தங்களுடைய பிள்ளைகள் எடுக்கும் மதிப்பெண்களை ஒப்பிட்டுப் பார்த்து தங்களுடைய பிள்ளைகளை வசை பாடுகின்றார்கள்.

இத்தகைய கெட்ட பழக்கமானது பிள்ளைகளை தைரியமற்றவர்களாக மாற்றிவிடும். பெற்றோர் தமது பிள்ளைகள் செய்து முடித்த சிறிய காரியங்களையும் பாராட்டி அவர்களை ஊக்குவித்து வரும் போதுதான் பிள்ளைகள் படிப்பின் மீது ஆர்வத்தை வளர்த்துக் கொண்டு நன்கு படித்து வருவார்கள்.

ஒப்பிட்டுப் பார்ப்பதை நாம் வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நாம் அனைத்தையும் மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து வருவதைப் பழக்கமாகக் கொண்டிருக்கிறோம்.

ஒப்பிட்டு பார்ப்பவன், நிறைய மனவேதனையை அனுபவித்து வருவான். அவன் அனைவரிடமும் யாசகம் கேட்கும் நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக் கொண்டுவிடுவான். ஒப்பிட்டுப் பார்த்து வருபவன் யாரையும் நேசித்து அன்பு காட்டாதவனாக தான் இருந்து வருவான். அப்படிப்பட்ட வகையில் சுதந்திரமாகச் செயல்பட முடியாது. ஒப்பிட்டுப் பார்க்கும் குணம் போட்டி, பொறாமை, சண்டை போன்றவற்றை உருவாக்கும்.

ஒப்பிட்டுப்பார்ப்பது மனக்குழப்பத்தையும் ஏமாற்றத்தையும் உருவாக்கும். இது மனிதர்களிடையே பொறாமையை வளர்க்கும். பொறாமையில் இருந்து போட்டி, மனப்பான்மை, யுத்தங்கள் உட்பட அனைத்துப் பிரச்சனைகளும் உருவாகக் காரணமாக இருந்து வருகிறது.

ஒப்பிட்டுப் பார்க்கும் குணம் ஒருவனைத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளி விடுகிறது. இது ஒருவனை வக்கிர புத்திபுள்ளவனாக மாற்றிவிடுகிறது.

நம்முடைய கலாச்சாரமும் ஒப்பிட்டுப் பார்ப்பதையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக ஒருவன் வாழ்நாள் முழுவதும் தன்னைவேறு ஒருவனாக மாற்றிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறான்.

ஒப்பிட்டுப் பார்க்கும் குணம் போட்டி மனப்பான்மை இரக்கமின்மை முன்னேற வேண்டும் என்ற பேராசை போன்ற தவறான வழி முறைகளைப் பின்பற்றும்படி செய்து விடுகிறது. இது மனக்கவலை பயம் துக்கம் நிச்சயமற்ற நிலை போன்றவற்றை உருவாக்கி ஒருவனை நிலை தடுமாறும்படி செய்து விடுகிறது. ஒப்பிட்டுப் பார்ப்பது ஒருவனது சக்தியையும் நேரத்தையும் வீணடித்து விடுகிறது.

## வளமான

## வாழ்விற்கு ........

வளமான வாழ்விற்கு
தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை
செய்வதும் தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்.

தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை
செய்கிறான்.

நன்மை செய்பவன் தனக்கும்
பிறர்க்கும் நன்மையே செய்கிறான்.
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோயிலுக்கு போவதும் இறைவனை
வழிபடுவதும் பயனற்றதாகும்.
நேர்மையுடனும் தைரியமாகும்.
பக்தி சிரத்தையுடன் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி

– சுவாமி விவேகானந்தர் –

# சமூகப்பணியில் தனி வரலாறு

ஈழுத்தமிழரின் போராட்ட வரலாற்றில் தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் விடுதலைப் போராட்ட அமைப்புகளுக்கு ஒரு வரலாறு இருப்பது போல் அறவழிப் போராட்டக் குழுவுக்கும் ஒரு தனித்துவமான வரலாறு இருக்கின்றது.

அறவழிப் போராட்டக்குழுவின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் அனைவரும் இத்தகைய போராட்ட அமைப்புகளுடன் தொடர்புபட்டவர்களாகவே காணப்பட்டனர்.இவ்வாறு செயற்பட்டவர்களில் பலர் இன்று குழுவின் தொடர்புகளின்றியிருக்கின்ற -போதும் சில சேவையாளர்களின் உணர்வு பூர்வமான செயற்பாடுகளினால் அறவழி போராட்டக்குழு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

எழுபதுகளில் கைதடிக் கிராமத்தில் ஏற்பட்ட சாதிக்கலவரங்களே அறவழிப் போராட்டக்குழுவின் தோற்றத்துக்கு வித்திட்டது. திடீர் தோற்றமாக இருந்தபோதும் படிப்படியாக மக்கள் பணியில் அறவழிப் போராட்டக்குழு முன்னேறி வந்துள்ளதை எவரும் நிராகரிக்க முடியாது.

சாத்வீக வழியில் முகிழ்ந்த தமிழர் போராட்டம் பின்னர் ஆயுதப் போராட்டக்குழுவின் பெயர் தொடர்பாக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.அறவழி மூலம் எதனையும் சாதிக்க முடியாது மறவழியே இன்றைய தேவை என்ற கருத்துகள் மேலோங்கியிருந்தன.

போராட்டக்குழு என்பதனை நீக்கி விடுமாறு ஒரு சாராரும் அறவழியே பொருத்தமானது என இன்னொரு சாராரும் என கருத்துக்களை வலிந்து தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

இத்தகைய கருத்துக்கள் விமர்சனங்கள் எதனையும் களத்தில் நின்ற போராட்ட சக்திகள் பொருட்படுத்தாமல் குழுவின் சேவைகளுக்கு பல வழிகளிலும் துணையாக்கி நின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

எது எப்படியிருந்த போதும் அறவழிப் போராட்டக்குழுவின் பணிகள் வட இலங்கை முழுவதும் விஸ்தரிக்கப்பட்டன.பாலர்கள் தொடக்கம் வயோதிபர்கள் வரையும் ஆயிரக்கணக்கான பயனாளிகள் அறவழியிலிருந்து பயனடைந்தனர். அகதிகள் பராமரிப்பு, புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகள், பாலர் கல்வி நிலையங்கள், விவசாய உதவித் திட்டங்கள், குடும்பத்தலைவர்களை இழந்த குடும்பங்கள் பராமரிப்பு, மாணவர்கள் மற்றும் தாய்மாருக்கான உதவி, விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், தமிழ் சிறுவர் தின நிகழ்வுகள், ஒன்று கூடல்கள், இலக்கிய சந்திப்புகள், கல்விப் பயிற்சித் திட்டங்கள் , கிராமிய நூலக சேவைகள் , அறவழி பொது நூலகம் , சிரமதானம் என பல்வேறுபட்ட பணிகள் வட இலங்கை எங்கும் வியாபித்தன.

"மக்களுக்கு தொண்டு செய்ய விரும்புகின்றாயா? அப்படியானால் கிராமங்களை நாடிச்செல்" என்ற மகாத்மா காந்தியின் கருத்தினை சிரமேற் கொண்டு அவரது வழியிலே கிராமங்களையே தளமாக கொண்டு அறவழிப் போராட்டக்குழு பணியாற்றியது.

சுமார் அறுபதுக்கு மேற்பட்ட கிராமங்களை திட்டக்கிராமங்களாகக் கொண்டு அறவழிப் போராட்டக்குழு செயற்பட்டு வந்தது.முழுக்க முழுக்க தமிழர்களையே உள்ளடக்கிய அதுவும் யாழ்ப்பாண மாவட்டத்தையே கொண்ட ஒரு தொண்டர் நிறுவனம் இவ்வாறு பல திட்டங்களையும் ஆயிரக்கணக்கான பயனாளிகளையும் கொண்டிருந்தது. இதற்கு காரணம் ஆரம்ப காலம் தொட்டு இன்று வரையும் அதன் செயலாளராகப் பணியாற்றுகின்ற எம்.கே.ஜீவகதாஸ் என்றால் அதுமிகையாகாது ஸ்தாபாகர் க.சச்சிதானந்தன் வி.சு.துரைராஜா [கனடா] வீ.ஜீ தங்கவேல் ச.தங்கராஜா கே.கோபாலகிருஷ்ணன் செல்வஜோதி என அறவழி இயக்குநர் சபையினரும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

மனித அடிப்படைஉரிமைகளைப் பேணுவது மக்கள் ஆட்சியின் முதன்மையான பொறுப்பென்ற சித்தாந்தம் உலகெங்கும் வேரூன்றி வருகின்றது. இதற்கு அத்தியவசியமானவை தொண்டர் நிறுவனங்கள் என்ற உண்மையை அறவழிப்போராட்டக்குழுவின் செயற்பாடுகளிலிருந்து தெரிந்து கொள்ள முடியும்.

குழுவினுடைய 25 ஆண்டு காலப்பணிகள் ஆய்வு செய்யப்பட்டு ஏனைய தன்னார்வ தொண்டு அமைப்புக்களுக்கு வழிகாட்டப்பட வேண்டும். தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பணிகள் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிக அளவில் காணக்கூடியதாக இருக்கிறது. இவை உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஐ.நா. தொண்டு நிறுவனங்கள் என மூன்று வகைப்பட்டதாகவும் இருக்கின்றன.

இவற்றிலே உள்ளூர் நிறுவனங்களை உள்ளடக்கி "யாழ். மாவட்டஅரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்" உருவாக்கப்பட்டுள்ளதும் – இந்த இணையத்தின் குரல் இன்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவும் விளங்குகின்றமையும், சுட்டிக்காட்டத்தக்கதே.

90களில் யாழ்ப்பாணத்தில் நிலவிய இராணுவ நெருக்குவாரத்தின் மத்தியில் இடர்படும் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு என யாழ்ப்பாணம் ராசா வீதியிலுள்ள ரெட்பான நிறுவனத்தில் இந்த இணையத்துக்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது.

அன்றைய சூழலில் இத்தகைய நிறுவனங்கள் அடிக்கடி சந்திக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டன. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல கொக்குவில் போன்ற இடங்களிலும் சந்திப்புக்கள் நடத்தி வாராந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மக்களுக்கான உதவிகள் பற்றி ஆராயப்படும். [இச்சந்திப்புக்களில்அறவழிப் போராட்டக்குழுவின் சார்பில் நான் கலந்து கொண்டமையினாலே இதனைக் குறிப்பிடுகின்றேன்.]

அன்று தொடர்ந்து நடைபெறும் விமானக்குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்கள் போன்றவற்றினாலே யாழ்ப்பாணத்தில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் நடமாட வேண்டியிருந்தது. இந்த வேளையில் அரச இயந்திரம் முற்றாக ஸ்தம்பித்திருந்தது. இதனால் மக்களுக்கு உதவிகளை உடனடியாக கிடைக்கச் செய்வதில் அறவழிப்போராட்டக்குழு போன்றவற்றின் பணி மகத்தானது என்பதனை குறிப்பிட்டேயாக வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் புரையோடிப் போயிருக்கும் தீண்டாமை என்னும் கொடிய நோயைக் கட்டுப் படுத்துவதற்கு அறவழிப்போராட்டக்குழுவும் பல தளங்களில் நின்று பாடுபட்டது என்பதனை எவரும் மறுக்க முடியாது.

ஆலயப் பிரவேசம், தேநீர் கடைப்போராட்டம், மயானத்தில் உரிமைப்போர், சங்கானைப் போராட்டம், கரவெட்டி கன்பொல்லையில் சாதி ஒழிப்புப் போர், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய உள்நுழைவுப் போராட்டம், மாவிட்டபுரம் ஆலயப் பிரவேச போராட்டம் போன்ற பல்வேறு வகையான போராட்டங்கள் நடத்தப்பட்டபோதும் சாதி முறை அழிந்து போனதாக இல்லை. அது ஏதோ ஒரு வகையில் தமிழினத்துக்கு சாபக்கேடாகவே தொடர்ந்து கொண்டிருக்கிறது.



1927 ஆம் ஆண்டு தொடக்கம் 1969 வரையும் ஈழத்தில் சாதியத்துக்கு எதிரான போராட்டங்கள் கூர்மையடைந்திருந்தன. எழுபதுகளில் எழுந்த தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உள்வாங்கப்பட்டு தொண்டு நிறுவனத்துக்குரிய பணிகளை மேற்கொண்டமையினால் இதில் முழுமையாக ஈடுபட முடியாமல் போய்விட்டது.

சாதிப்பிரச்சனையை மையப்படுத்தி உருவான அறவழிப்போராட்டக்குழுவும் நாட்டில் எழுந்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் உள்வாங்கப்பட்டு தொண்டு நிறுவனத்துக்குரிய பணிகளை மேற்கொண்டமையினால் இதில் முழுமையாக ஈடுபட முடியாமல் போய்விட்டது.

**என்.கே.துரைசிங்கம்**

துணைஆசிரியர் [ஈழநாடு பாரிஸ்]

[வெள்ளி விழா மலரிலிருந்து – 2004]

# விளம்பரங்கள்

MOVEMENT FOR A NEW SOCIETY

அன்பு அகிம்சை எளிமை

அறவழியின் புதிய செயலகக் கட்டடத் திறப்பு விழாவிற்கு
எமது ஆசிகள்

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

இல: 14. தனங்கிளப்பு வீதி,
சாவகச்சேரி.

T.P.: 077 3039616

தென்மராட்சியில் .......!
தகவல் தொழில்நுட்பவியல் துறையில்
புதிய அத்தியாயம் உதயம் !





கனேடிய உலகப் பல்கலைக்கழக
சேவை நிறுவனத்தின் *(WUSC)* அனுசரணையுடனான
மற்றொரு செயல்திட்டம்


**கற்றல் வளப் பயன்பாட்டு மையம்**

Learning and Resource Utilization Center

அறவழி வளாகம்,
இல: 29, கைதடி நுணாவில்.
சாவகச்சேரி.

Tel: 060 221 6911,
077 3144730

அறவழிப் போராட்டக் குழுவின் புதிய செயலகத் திறப்பு விழாவுக்கு
எமது இனிய வாழ்த்துக்கள்.








பாடசாலைகள், அலுவலகங்களுக்குத் தேவையான
அனைத்து வகையான
காகிதாதிகள், அலுவலக உபகரணங்களை
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
காகிதாதிகள் விற்பனையில் முன்னோடிகள்

# அசீர் வணிக நிலையம்
# ASEER VANIGA NILAIYAM

இல, 202 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

அறவழியின் புதிய செயலக கட்டடத் திறப்பு விழாவுக்கு
எமது நல்லாசிகள்



தங்கப்பவுண் நகை வியாபாரத்தில்
மிக நீண்டகால அனுபவமும் தேர்ச்சியும்
கொண்ட ஒரே நிறுவனமாகத் திகழ்வது

# வீ. எம். கே. ஜுவல்லறி
# V.M.K. JEWELLERY

105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## நியூ வி.எம். கே ஜுவலர்ஸ்

கண்டி வீதி,
சாவகச்சேரி

T. P : 060 212 989 T. P : 0777723021

அறவழிப் போராட்டக் குழுவின்
மக்கள் சேவைகள் மென்மேலும்
பெருகிட எமது நல்வாழ்த்துக்கள்

உங்களுக்குத் தேவையான அனைத்துவிதமான
மளிகைப் பொருட்களுக்கும்
நாடவேண்டிய ஒரே இடம்

**சண்முகம் அன் சன்ஸ்**


**SANMUGAM & SONS**

கண்டி வீதி,
சாவகச்சேரி.

அறவழிப் போராட்டக் குழுவின்
மக்கள் சேவைகள் பெருகிட எம் வாழ்த்துக்கள்

உங்களின் நோய்களுக்கு
ஆயுள்வேத முறைப்படியான மருத்துவ
சிகிச்சைகளைப் பெற்று வாழ்வில்
நலமுடன் வாழ இன்றே நாடுவீர்





**ஆரோக்கிய வாச வைத்தியசாலை**

அதிபர் : டாக்டர் திருமதி. லியோன் புஸ்பராணி
ஆரம்பகர்த்தா : அமரர் லயன் டாக்டர் பேதுரு பிலிப்ஸ். ஜே.பி.
மட்டுவில்.

நவாலி,
மானிப்பாய்.

அறவழிப் போராட்டக் குழுவின்
சேவைகள் பெருகிட எமது வாழ்த்துக்கள்




# அம்பிகா மருந்தகம்




கண்டி வீதி,
சாவகச்சேரி.

# AMBIHA DISPENSARY



Kandy Road,
chavakachcheri.





**சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் – சாவகச்சேரி**

**கூட்டுறவே நாட்டுயர்வு**

**எமது சேவைகள்**

1. நுகர்ச்சி சேவை
2. கிராமிய வங்கி சேவை
3. எரிபொருள் நிலைய சேவை
4. கதிரை வாடகை சேவை
5. வாகன சுத்திகரிப்பு நிலையம்
6. கூட்டுறவு நகர்
7. புடவை நிலையம்

கூட்டுறவு நகர் சேவைகள்

1. காகிதாதிகள்
2. வீட்டு மின் விளக்குகள்
3. குளிர்பானம், குளிர்களி
4. அழகுசாதனப் பொருட்கள்
5. காலணி வகை
6. பிஸ்கட் வகை
7. பலசரக்குப் பொருட்கள்

**தரமான சேவை, நியாயமான விலை**

**சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

பிரதான வீதி, சாவகச்சேரி

தொ. பே. எண் : 060 221 3282

பதிவு இல: யா/1551 பதிவு திகதி: 14-02-1971



With best Compliments from.
சிறுவர்கள், பெண்கள், ஆடவர்களுக்கு ஏற்ற
நவீன காலணிகளையும், மணிக்கூடுகளையும், விளையாட்டுப் பொருட்கள்
மற்றும்
வானொலி வகைகளையும் பெற
விஜயம் செய்யுங்கள்
விமலாஸ்
இல: 9. நவீன சந்தை.
சாவகச்சேரி.




அறவழி போராட்டக் குழுவின்
புதிய கட்டடத் திறப்பு விழாவிற்கு
எமது வாழ்த்துக்கள்
நேசம் அழகு நகை
தொலைபேசி. 077 3068802
பிரதான வீதி,
சங்கானை.

*With the best Compliments from.*

# Kugan Studio

# குகன் ஸ்ருடியோ



தென்மராட்சியில் நீண்டகாலமாக
புகைப்படத்துறையில் தேர்ச்சியும்,
அனுபவமும், தொழில்நுட்பவியலும்
கொண்ட ஒரேயொரு
ஸ்ருடியோ இதுவாகும்

உங்களின் புகைப்படத் தேவைகளுக்கு
நாடுங்கள்




## குகன் ஸ்ருடியோ


இல: 14. கண்டி வீதி,
சாவகச்சேரி.

T.P : 077 3039450

அறவழிப் போராட்டக் குழுவின்
மக்கள் சேவைகள் பெருகிட எம் வாழ்த்துக்கள்


உங்கள் இல்லங்கள், அலுவலகங்களுக்குத்
தேவையான மின் ஒட்டுப் பொருட்களை
நேர்த்தியாகவும், அழகாகவும்
செய்வித்துப் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்





# என். வீ. என்ரப்பிறைசஸ்

# NV ENTERPRISES



இல: 29, கைதடி நுணாவில்.
சாவகச்சேரி.

(அறவழியின் உற்பத்திப் பிரிவுத் திட்டம்)

அறவழிப் போராட்டக் குழுவின்
மக்கள் நலச் சேவைகள் மேன்மேலும் வளர எமது வாழ்த்துக்கள்

**உங்களுக்குத் தேவையான சகலவிதமான**




- கம்பி வகைகள்
- பெயின்ற் வகைகள்
- கட்டடப் பொருட்கள்
- கூரைத் தகடுகள்
- ஆணி வகைகள்
- PVC பிற்றிங் வகைகள



**யாவற்றையும் ஒரே இடத்தில்**
**நியாயமான விலையில்**
**பெற நாடவேண்டிய ஒரே இடம்**

# கதிரவன் இரும்பகம்







# SUN HARDWARE STORES

Tp : 021 222 5865



22, டச்சு வீதி,
சாவகச்சேரி.

அறவழிப் போராட்டக் குழுவின் (NVDAG)
புதிய கட்டடத் திறப்பு விழாவிற்கு
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்





உங்கள் இல்லங்கள்,
செயலகங்கள்,
வர்த்தக நிறுவனங்களின்
அலுமினியம் பொருத்துதல்
வேலைகளுக்குத்
தேவையான
அனைத்து வகையான உபகரணங்களையும்
ஒரே இடத்தில்
நியாயமான விலையில்
பெற விஜயம் செய்யுங்கள்



# த. குமாரசாமி அன் சன்ஸ்

# T. KUMARASAMY & SONS

இல: 248/1 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

T.P : 021 222 3879

அறவழியின் புதிய செயலகத் திறப்பு விழாவுக்கு
எமது அன்பான வாழ்த்துக்கள்.

உங்களுக்குத் தேவையான

PVC, S. LON பைப்புக்கள்


மின் ஒட்டு உபகரணங்கள்

பூட்டு வகைகள்

அலுமினியம் பொருத்துதல் உபகரணங்கள்

இரும்பு நெற் வகைகள்

ஆயுத உபகரணங்கள்





ஒரே இடத்தில் நம்பிக்கையுடன் பெற்றுக் கொள்ள நாடுவீர்


JOY HARDWARE STORES

ஜோய் காட்வெயர் ஸ்ரோர்ஸ்

214, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.



அறவழியின் புதிய செயலகத் திறப்பு விழாவுக்கு
எமது அன்பான வாழ்த்துக்கள்.




கடற்தொழிலாளர்களுக்கான

மீன்பிடி உபகரணங்களை

நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள

விஜயம் செய்யுங்கள்.



சமுத்ரா ரேட்ஸ்

SAMUTHRA TRADES

14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. இல : 021 2227048

அறவழியின்
புதிய கட்டடத் திறப்பு விழாவிற்கு
வாழ்த்துக்கள்



சாவகச்சேரியில்
அலுமினிய சோகேஸ்
பாட்டிசன் வேலைகள்
யன்னல் கண்ணாடிகள்
பிளைவுட் பலகைகள்
அலுமினியம் பார் போன்றவற்றைப் பெறவும்
படங்களுக்கு அழகிய முறையில் பிறேம் போடவும்
நாடுங்கள்


சகித் படமாடம் அன்ட் அலுமினிய பிற்றிங்
SAKITH Picture Palace & Aluminium Fitters

Tel. 077-6016276.

இல 11, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

அறவழி போராட்டக் குழுவின் புதிய கட்டடத் திறப்பு விழாவிற்கு
எமது இதயம்கனிந்த ஆசிகள்






உங்கள் வீடுகள், அலுவலகங்களின்
மின் பொருள்கள் தேவைகளுக்கு
யாழ்ப்பாணத்தில் நாடவேண்டிய ஒரே இடம்

Dealers for ABANS

Distributors for KML Cables




யாழ்ப்பாணம் மின்னகம்
JAFFNA ELECTRICALS

No. 6. Stanley Road,
Jaffna.




Tel. 021-222-2353
Fax. 021-222-2552

With best Compliments from.



# ஆர்க் என்ரப்பிரைசஸ்
# Ark Enterprises



General Hardware Merchants
& Suppilers

**Dealers of**

Water Pumps
Power Tools
Machineries
Hand Tools
Agricultural Implements
Tiles
Bathroom Fittings
PVC Pipes
PVC Fittings
Buildings Materials

*No. 150,152, Stanley Road,, Jaffna*

*T.P : 021 222 2052*

With best Compliments from.



திருமணப் பட்டுப் புடவைகள்

நவநாரிக நங்கையர்களுக்கான சாறிகள், சல்வார் கமீஸ்,

ஸ்கேட்ஸ் & பிளவுஸ்

ஆடவர்களுக்கான ஜீன்ஸ் சேட்டுக்கள்

சிறுவர்களுக்கான உடுப்புக்கள்

யாவற்றையும் தெரிவு செய்ய சாவகச்சேரியில் உகந்த இடம்



# Annai Tex
# அன்னை ரெக்ஸ்

இல 11, நவீன சந்தை (முன்பக்கம்)
சாவகச்சேரி.

Tel. 077-3107599

அறவழிப் போராட்டக் குழுவின்
புதிய கட்டடத் திறப்பு விழா சிறப்புற எமது வாழ்த்துக்கள்

உங்களுக்குத் தேவையான




- லுமாலா
- கீரோ

ஆடவர்,



மகளிர்களுக்கான சைக்கிள்களையும்

சைக்கிள் உதிரிப்பாகங்களையும்



நியாயமான விலையில்

கொள்வனவு செய்ய

யாழ்ப்பாணத்தில் நாடவேண்டிய
ஒரே இடம்

ஈஸ்வரன் ரேடேர்ஸ்

EASWARAN TRADERS

69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Tp : 021 222 2813

*With best Compliments from.*

**YOUR**


**PARTNER**


**IN**

**IT**

**SOLUTION**










# STP Computer World (Pvt) Ltd



Kasthuriyar Road.
Jaffna.

Tel: 021 222 2674

Ramyan Printers.

அறவழி போராட்டக்குழுவின்
மக்கள் நல சேவைகளுக்கு
எமது இதய பூர்வ வாழ்த்துக்கள்.

உங்களுக்குத் தேவையான

- திருமண அழைப்பிதழ்கள்.
- பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள்.
- கடிதத் தலைப்புகள்
- நினைவு மலர்கள்
- ஏனைய சஞ்சிகைகள், மலர்கள்

போன்றவற்றை நவீன முறையில்
அழகுற அச்சிட்டுப்பெற்றுக் கொள்ள



ரம்யன் அச்சகம்


வைத்தியசாலை வீதி,
மட்டுவில்,
சாவகச்சேரி.

ரம்யன் அச்சகம்



அறவழிப் போராட்டக் குழுவின்
புதிய செயலகக் கட்டடத் திறப்பு விழாவுக்கு
எம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்






மீன்பிடி உபகரணங்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

Amuthak Kadal


அமுதக் கடல்



254,1/1 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
TP - 021 2223508

# நன்றி

## பகிர்வு



அறவழிப்போராட்டக்குழுவின்
புதிய செயலக மற்றும் கற்றல்வளப் பயன்பாட்டு
மையம் (LRUC)
கட்டடத் திறப்பு விழா
குறித்து வெளியிடப்பட்டுள்ள
நினைவு மஞ்சரிக்கு
ஆசிச்செய்திகள்,
விளம்பரங்கள்,
மற்றும் கட்டுரைகளை
வழங்கிய பெருந்தகைகளுக்கும் ..........

இம் மஞ்சரியை வெளியிட்டு
வைக்க பேருதவி
வழங்கிய அன்பர்கள்
நண்பர்களுக்கும் ............

மஞ்சரியைச் சிறப்பிக்க
அவ்வப்போது
ஆக்கபூர்வமான
ஆலோசனைகளை
வழங்கியவர்களுக்கும் .............


மஞ்சரியின் அச்சுப்பதிவு
வேலைகளை அழகுற
அச்சிட்டு வழங்கிய
"ரம்யன் அச்சகம்"
நிறுவனத்தாருக்கும்
எம்
இதயபூர்வமான
நன்றிகளை
காணிக்கையாக்குகிறோம்.

அறவழிப்
போராட்டக்குழு





With Best Compliments Frome
தென்மராட்சியில்
மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை (SPARE PARTS SALE)
பழுதுபார்த்தல் (REPAIRS)
சுத்திகரித்தல் (SERVICES)
மோட்டார் சைக்கிள் விற்பனை (MOTOR CYCLE SALES)
போன்றவற்றுக்கு
கொழும்பு டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டெட்டின்
DPMC - 2W, 3W
bajaj
பஜாஜ் அங்கீகாரம் பெற்ற முகவர்
bajaj
இங்கே மோட்டார் சைக்கிள்.
ஆட்டோவிற்கான
இலவச சேவிஸ் 1. 2. 3
பெற்றுக் கொள்ள முடியும்.
சுரேஸ் மோட்டோர்ஸ் அன் என்ஜினியர்ஸ்
இல. 301, 302, 303 கண்டிச் சாலை,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
சுரேஸ் மோட்டோர்ஸ் அன் என்ஜினியர்ஸ்
Suresh Motors & Engineers
கைபேசி : 077 7064110
077 6702454
தொலை நகல் : 060 221 3224
ஈமெயில் : Srisdish @yahoo.com.




Ramyan Printers - Hospital Road, Madduvil.